Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்

முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை



குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

கிளிநொச்சி.

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 | மார்கழி 21 | ஹிஜ்ரி 1426 | துல்ஹஜ் 04 | (05.01.2006) | வியாழக்கிழமை | இதழ் 97

# இராணுவ வன்முறை தொடர்ந்தால் மோசமான விளைவுகள் ஏற்படும்!

## விடுதலைப் புலிகள் கடுமையான எச்சரிக்கை

கிளிநொச்சி —

சமாதானத்துக்கு இடமளிக்காமல் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகள், போர்நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளாகவே கொள்ளவேண்டியுள்ளது.

தமிழ்மக்கள் மீதான இத்தகைய அடக்குமுறைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடுமென விடுதலைப் புலிகள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அரசியற்துறை வெளியிட்டிருக்கும் கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அட்லஸ் பாலேந்திரன் நேற்று வைத்தியசாலையில் மரணம்!

கொழும்பு —

கொழும்பு - வெள்ளவத்தைப் பகுதியில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த தமிழ் வர்த்தகரான பாலேந்திரன் என்ற அட்லஸ் பாலா நேற்று அதிகாலை 2.50 மணியளவில் உயிரிழந்தார்.

வெள்ளவத்தையில் றொலக்ஸ் வெதுப்பகம் அருகே அடையாளம் தெரியாதநபர்களால் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

மிக ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தார்.

வெள்ளை வானில் வந்த குழுவினர் இவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாக வெள்ளவத்தைப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துக்கான காரணம் எதுவும் வெளியாகவில்லை.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமான போக்குவரத்து நிறுவனமான அட்லஸ் ரிரவல்ஸ் நிறுவனத்தின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டில் பெண் உயிரிழப்பு!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - சேத்துக்குடாவில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்றில் பெண்ணொருவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் விக்டோரியா செபமாலை (வயது40) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேசம்பவத்தில் கிழங்கு வியாபாரியான வடிவேல் மனோகரன் (வயது 32) என்பவரும் காயமடைந்தார்.

## முல்லைத்தீவு கடற்பரப்பில் புலிகளின் ஆயுதக் கப்பல்!

### சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு —

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று முல்லைத்தீவுக் கடற்பகுதிக்கு வந்திருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக இராணுவப் புலனாய்வுத்துறை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியிருப்பதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விமானங்களைத் தாக்கியழிக்கும் ஆயுதங்கள் மற்றும் புதிய வகைப் பீரங்கிகள் உட்படப் பெருந்தொகையான ஆயுதங்களுடன் வந்த இந்தக் கப்பல் கடந்த சில நாட்களுக்கு முன்னர் முல்லைக் கடல் எல்லைக்கு அப்பால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு தெரிந்து கொண்டதையடுத்து இதுகுறித்து அரசாங்கத்துக்கு விசேட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தது.

இந்த அறிக்கையின் பின்னர் உடனடியாகச் செயற்படும் வகையில் தயாராக இருக்குமாறு - விமானப் படைக்கும், கடற்படைக்கும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதவேளை - விடுதலைப் புலிகளின் பல சிறிய படகுகள் கடந்த மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் முல்லைத்தீவிலுள்ள கடற்புலிகளின் முகாமை அண்டிய (12 ஆம் பக்கம் பார்க்க)



## ஊர்காவற்துறை - கரம்பனில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

ஊர்காவற்துறை - கரம்பன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத் தில் கரவெட்டியை சொந்த இடமாகக் கொண்ட காங்கேசு சிவநேசன் (வயது 30) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு மேற்படி நபர் இரவு உணவு உண்டுவிட்டு கை கழுவுவதற்காக வீட்டுக்குவெளியே வந்தபோது - வீட்டு ஒழுங்கையில் நின்றவர்கள் இவரது பெயரைக் கூறி அழைத்தனர்.

ஒழுங்கைக்கு வந்த இவர் மீது ஆயுதபாணிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த மேற்படி நபர் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மரணமடைந்தார்.

மரணமடைந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் சூடு; இளைஞர்கள் காயம்!

யாழ்ப்பாணம் —

யாழ். நகரில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள வெள்ளாந் தெருவில் இடம் பெற்றது.

இராசரத்தினம் காண்டீபன் வயது 25, பூலோகசுந்தரம் செல்வகிருஷ்ணன் வயது 30 ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடிவேல் மனோகரன் (வயது 32) என்பவரும் காயமடைந்தார்.

கிழங்குக் கடைக்கு முன்பாக உரையாடிக் கொண்டிருந்தபோது - அங்கு வந்த இனந் தெரியாத நபர்கள் மேற்படி பெண்ணை குறி வைத்து துப்பாக் கிப்பிரயோகம் செய்தனர்.

24 மணிநேரமும் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்ட - விமானப்படைக்குரிய உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

# புளொட் உறுப்பினர் சடலமாக மீட்பு!

வவுனியா

வவுனியா - வேப்பங்குளத்தில் இனந்தெரி யாத நபர்களால் கடந்த 31 ஆம் திகதி இரவு கடத்திச்செல்லப்பட்ட புளொட் உறுப்பினர் மணி யின் சடலம் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட் டது.

வேப்பங்குளத்தில் வைத்து கடந்த 31 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்களால் மணி எனப் படும் கிருஷ்ணசாமி திருநாவுக்கரசு (வயது 26) என்ற புளொட் உறுப்பினரே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறத் திலுள்ள - கெபிட்டிகொலாவ என்ற பிரதேசத் தில் ரம்பேவ காட்டுப் பகுதியை அண்டியதாக அட் டம்பஸ்கஸ்கொட என்ற இடத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று கிடப்ப தாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு அனுராதபுர வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர்.

இதேவேளை சடலத்தின் அருகே புளொட் அடையாள அட்டை, (12 ஆம் பக்கம் பார்க்க)



திருகோணமலையில் ஐந்து அப்பாவி மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கிளிநொச்சியில் மாணவர்கள் நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியிலிருந்து....

# இரண்டாவது நாளாகவும் ஸ்தம்பித்தது திருமலை!

திருகோணமலை

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண் டித்து நேற்று இரண்டாவது நாளாகவும் ஹர்த் தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் திருகோண மலையில் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக் கப்பட்டது.

அரச திணைக்களங்கள், கூட்டுத் தாபனங் கள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. உள்ளூர் மற்றும் வெளியூருக்கான போக்கு வரத்து முற்றாக இடைநிறுத்தப்பட்டதால் வீதி களில் மக்கள்நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. மாணவர்கள், ஆசிரியர்கள் வர வின்றி பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

வர்த்தக நிலையங்களிலும், அரச திணைக் களங்கள், மற்றும் பொது இடங்களில் கட்டப் பட்டிருந்த கறுப்புக்கொடிகள் இராணுவத்தால் அறுத்தெறியப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

யில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் மேற்படி வீதியில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக் கிளில் பின் தொடர்ந்த நபர்கள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றனர்.

படுகாயமடைந்த இவர்கள் இருவரும் தற் போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையில் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை!

பருத்தித்துறை

பருத்தித்துறை - சாந்தாதோட்டம் பகுதி யில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள் ளார்.

நேற்றுக் காலை 11 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் இந்திரதாஸ் உதய சுதன் (வயது 30) என்ற நபரே வெட்டிக் கொலை செயயப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மேற்படி நபர் அவரது வீட்டிலிருந்து வெளியே வந்தபோது பற்றைக்குள் மறைந்திருந்த சில இளைஞர்கள் தலையில் வெட்டியும், பொல்லு களால் பலமாக தாக்கிவிட்டும் தப்பிச்சென்ற னர்.

இதனையடுத்து மேற்படி நபர் படுகாய மடைந்த நிலையில் மந்திகை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது வழி யில் பரிதாபகரமாக மரணமடைந்தார். சடலம் மந்திகை வைத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர் மீதான தாக்குதல்கள் சுதந்திர போருக்கு வழிவகுக்கும்

## வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

வடமராட்சி —

தமிழ் மாணவர்கள் மீது இராணுவத்தினர் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி, மாணவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இனிமேலும் இவ்வாறான தாக்குதல்கள் தொடருமாயின் தேசியத் தலைவருடன் இணைந்து தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தும் சுதந்திரப்போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையில் கடந்த திங்கட்கிழமை பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட்ட உயர் கல்வி பயிலும் மாணவர்கள் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து வெளியிட்டஅறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுவினரும் மாணவர்கள் மீது நடத்திவரும் தாக்குதல்கள் படுகொலைகள் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

கடந்த திங்கட்கிழமை தமிழர் தாயகத்தின் தலைநகர் திருகோணமலையில் எமது சகோதரர்கள் கடற்படை பாதகர்களால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வடமராட்சி மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சம்பவம் அனைத்துத் தமிழ் மாணவர் உள்ளங்களில் உதிரக் கொதிப்பை ஏற்படுத்தியிருப்பதோடு தமிழ் மாணவர்கள் தங்கள் தாயகப் பகுதியில் சுதந்திரமாக நடமாடுவதில் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில வாரங்களாக இனவெறிப் படைகள் உயர் பீடத்தின் வழிகாட்டலுக்கமைவாக தமிழ் மாணவர்கள் மீது தொடர்ச்சியாக காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ச்சியாக தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதால் வீறுகொண்டு எழுந்து நிற்கும் தமிழ் மாணவர்களை அடிபணியச் செய்ய முடியும் என்ற உத்தியுடன் செயற்படுகின்றார்கள்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை திருகோணமலை காந்தி சிலைக்கருகில் கடற்படைப் பாதகர்கள் எமது மாணவ சகோதரர்கள் ஐவரை கொடூரமான முறையில் படுகொலை செய்தது மற்றும் இருவரைப் படுகாயப்படுத்தியதும் எமக்கு ஆழ்ந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கின்றது.

சிங்கள இன வெறிப்படைகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளதால் தமிழ் மாணவர்கள் பொங்கிக் கொதிக்கின்றார்கள். தமிழ் மாணவர்களின் அகிம்சை வழிப்போராட்டத்தை இனவெறிப் படைகள் ஆயுத முனையில் அடக்குவதால் தமிழ் மாணவர்கள் தம்மை தற்காத்துக்கொள்ள தயாராகிவிட்டனர்.

தமிழ் மாணவர்கள் இன்று பொங்கி எழுவதற்குக் காரணமானவர்கள் அரசும் அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகின்றோம்.

தமிழ் மாணவர் சமூகத்தினர் மீது அரசால் கல்வித்தரப்படுத்தல் என்ற வன்முறை முன்னர் கட்டவிழ்த்து விடப்பட்டபோது அவர்கள் ஆயுதம் ஏந்திப்போராடத் தள்ளப்பட்டார்கள். இன்று நாமும் அதேபோன்று ஆயுதம் ஏந்திப்போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

எனவே சிங்கள அரசே! தமிழ் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் தொடருமாயின் தமிழீழத்தை பிரகடனப்படுத்தும் சுதந்திரப்போராட்டத்தை முன்னெடுக்க அது வழிவகுக்குமென எச்சரிக்கின்றோம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தாச்சி சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ நாராயணன் சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத்தலைவர் வை. ஆனந்தஜெஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத் தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் அனைத்து அங்கத்துவ கழகப் பிரதிநிதிகள் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர் கலாசாலையில் உடலாளர் மன்றம்

யாழ்ப்பாணம் —

பலாலி ஆசிரிய கலாசாலையில் உடலாளர் மன்றம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெற்றத் தெரிவில் உடலாளர் மன்றத் தலைவராக உடற்கல்வித்துறையைச் சேர்ந்த பிரதீபன் தெரிவுசெய்யப்பட்டார்.

செயலாளராக உடற்கல்வித் துறையைச் சேர்ந்த வி. ஜெயநேசன், பொருளாளராக நீரியல் உயிர்வளத் துறையைச் சேர்ந்த செல்வி அ.மேரி ராதிகா, உப தலைவராக கணிதத் துறையைச் சேர்ந்த வ.ஐங்கரன், உப செயலாளராக விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த ஜொய்சி பிரபாலினி ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (12)

## அறநெறி மாணவர்களுக்கு சமய பாடப்பரீட்சை

உடுவில் —

மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சைவநெறி தேர்வுப் பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மூன்றாம் ஆண்டு தொடக்கம் பதினோராம் ஆண்டு வரையான மாணவர்களுக்கு இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அனைத்து பாடசாலை மாணவர்களும் அன்று காலை பரீட்சை நிலையத்திற்குச் சமுகமளிக்குமாறு அறநெறிப்பாடசாலை அதிபர் கா.கணேசதாசன் அறிவித்துள்ளார். போட்டிகளில் கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு 5ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது பரிசுகள் வழங்கப்படுமென தெரிவித்துள்ளார். (101)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சங்கத் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட கூட்டத்தில் மாவிநியோகம், சங்கத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும் முக்கிய முடிவுகள் எடுக்கவிருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## உரத்தின் விலை மாற்றம்

கிளிநொச்சி —

சீ.ஐ.சீ நிறுவனத்தால் ஆக்கப்பெற்ற உரங்களுக்கான ஆகக்கூடிய விற்பனை விலை கீழ் வருமாறு தீர்மானிக்கப் பட்டுள்ளது. 2006.01.01 ஆம் நாளிலிருந்து இவ் விலைக்கமைய இப் பொருளை விற்பனை செய்யுமாறு தமிழீழ நிதித்துறை விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி யாழ் - வன்னிப்பகுதி வேளாண் இடுபொருள் வாணிப உரிமையாளர்களைக் கேட்டுள்ளது.

| தொ. எண் | உரத்தின் பெயர் | விற்பனை விலை | |
|---|---|---|---|
| | | வன்னிப்பகுதி | யாழ்.மாவட்டம் |
| 01. | ரீ.எஸ்.பி (50 கிலோகிராம்) | 1,628.00 | 1,649.00 |
| 02. | எம்.ஓ.பி (50 கிலோகிராம்) | 1,706.00 | 1,727.00 |
| 03. | வி.01 (50 கிலோகிராம்) | 1,628.00 | 1,649.00 |
| 04. | ரீ.டி.எம் (50 கிலோகிராம்) | 1,103.00 | 1,124.00 |


நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசன்னா, லைலா மற்றும் பலர் நடித்த
கண்டநாள் முதல்
காட்சிகள் 11.00, 2.00, 5.00 (புதிய நேரம்)

புதிய யூனிவேசல் அக்கடமி
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
A/L 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
06.01.2006
வெள்ளி 4.00 p.m.
அமைதியான பாதுகாப்பான சூழலில் வகுப்புக்கள். (2157)

ராஜா யாழ்ப்பாணம்
சத்தியராஜ் (இருவேடம்) சங்கவி, ஆனந்தராஜ் நடித்த
அய்யர் I.P.S

காட்சிகள்:-10.30,2.00மட்டும் (பு.நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக
சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்

ஆறு
காட்சிகள்
10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அர்ஜுன், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
ஆணை
எமது மகத்தான பொங்கல் வெளியீடு!
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)


## முகாமைத்துவ கல்லூரி மாண்வர்களுக்கான அறிவித்தல்

முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப் படும் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்பிற்கான (G.A.Q., B.Com) விரிவுரைகள் 31.12.2005 ஆரம்பமாகியுள்ளன என்பதையும் AAT கற்கை நெறி புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் 07.01.2006 சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

இணைப்பாளர்,
முகாமைத்துவக் கல்லூரி,
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.
(சி/4435)

## மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



... பனை மரங்கள் அங்கு வளர்வதில்லை
ஆனாலும் அதிசயமாய் நீயங்கு
ஒற்றைப் பனைமரமாய்
ஓங்கி வளர்ந்து நின்றாய்
பற்றைக்குகந்த மண்ணில்
பனைமரங்கள் எத்தனை நாள்
உயிர்வாழும் என்று
எப்பொழுதும் பயந்து நின்றோம்
ஈற்றில் அது நிகழ்ந்தது....
எத்தனையோ ஈழவர்கள் இன்னல்களில் கை கொடுத்தாய்
நீசர்களின் பொய் மதுவில் நீதி மயங்கிநின்ற
உலகெங்கும் சென்று நீ உள்ளதை எடுத்துச் சொன்னாய்
உண்மையை அடித்துச் சொன்னாய்
இனத்தின் விடுதலைக்காய் புலிப் போரின் முரசடித்தாய்
நண்பா
தன்மானமுள்ள தமிழனாய்
நீ வாழ்ந்ததிற்கும்
எவருக்கும் அடங்காத ஈழவனாய்
நீ வாழ்ந்ததிற்கும்
உனக்கு நன்றி சொல்ல
நாங்கள் கூடுகின்றோம்
மறைந்தாலும் வாழ்பவனே
நீயும் வா!

நன்றி– தமிழர் ஒருங்கிணைப்புக்குழு- நோர்வே.
மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக்குழு.
(C/4985)

## நீங்காத நினைவுகளுடன் 45 ஆம் நாளில்

நிஜமாக 04 - 02 - 1954

நிழலாக 22 - 11 - 2005



### அமரர் இராசையா அரசகேசரி

(பிரதம எழுதுவினைஞர், முகாமைத்துவ உதவியாளர் தரம் I மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் கச்சேரி, கிளிநொச்சி)

விழிகள் கண்ட தெய்வமே உருவின்றிப் போனதேனோ
வழிகள் சொன்ன தந்தையே தனிமை இடையில் வந்ததுவோ
இருளே எமக்கு சொந்தமாயிற்று, ஒளியைத் தேடுகிறோம்
நிலையில் மாறி தொலைவாய்ச் சென்றீர்களே
திருவாயிருந்து எங்கள் வாழ்வில் என்றுமுடனிருப்பீர்!

139/3, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
(2158)

மனைவி
பிள்ளைகள்

# மாணவர்கள் மீதான தாக்குதல்; உடன் விசாரணை நடத்தவேண்டும்!

## ஜனாதிபதியிடம் சம்பந்தன் வேண்டுகோள்



திருகோணமலை —

திருகோணமலை - டொக்யார்ட் வீதி கடற்கரைப்பகுதியில் நின்றிருந்த அப்பாவி மாணவர்கள் ஐந்து பேர் கைக்குண்டு வீசி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் இடம்பெற்ற மாணவர்கள் மீதான கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உயர்தரக்கல்வி கற்றுக் கொண்டிருந்த அப்பாவி தமிழ் இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் மிக மோசமான கொடூர கொலைச்சம்பவமாகும்.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள படையினரின் பயங்கரவாதம் இதுவாகும். இதன்மூலம் தமிழ் மக்களை அடக்கலாம் என்று அரசாங்கம் நினைப்பது பயனற்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோழைத்தனமானதும், இழிவானதுமான இந்தச்செயலை வன்மையாகக் கண்டிக்கிறது.

குற்றமிழைத்தவர்களை உடனடியாகக் கைதுசெய்து நீதி முன் நிறுத்தும்படி ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் நாம் கோருகின்றோம். கிடைக்கப்பெற்ற அறிக்கையின் படி தாக்கும் எவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு ஆயுதப்படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் படையினர் மீது எவரும் தாக்குதல் மேற்கொள்ளவில்லை. அவ்வாறான தாக்குதல். ஆயுதப் படையினர் மீது நடத்தபட்டதற்கான ஆதாரங்கள் எவையும் இங்கு சமர்பிக்கப்படவில்லை. அப்பாவி பொதுமக்கள் மீது ஆயுதப்படையினர் வேண்டுமென்றே தாக்குதல் நடத்தி விட்டு அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டனர்.

இந்த விதமாக அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைப் பயமுறுத்தும் விதத்தில் ஆயுதப் படையினர் நடந்து கொள்வதைத்தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று நாம் ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறோம்.

ஐந்து இளைஞர்களின் மரணம், ஏனைய இரு மணவர்களுக்கு ஏற்பட்ட காயம், அவர்களின் குடும்பத்தவர்களுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பாகும். இதே வயதுடைய இளைஞர்களின் பெற்றோர்களுக்கு தமது குழந்தைகளை இழந்த பெற்றோர்களின் பாரிய இழப்பை உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். பிள்ளைகளை இழந்த குடும்பங்களுக்கும் படுகாயங்களுக்கு உள்ளான பிள்ளைகளின் குடும்பங்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைப் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு சம்பந்தன் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

# ஒற்றையாட்சி கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாதாம்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு —

இந்தியா கூறுவதற்காக ஒற்றையாட்சிக் கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாது. அவ்வாறு விட்டுக்கொடுப்பதற்கு ஹெல உறுமய முட்டாள்களின் கட்சி அல்ல என அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்தியா கூறுவது போன்று நாம் நடப்பதற்கு இலங்கை, இந்தியாவின் ஒரு மாநிலம் அல்ல. இலங்கை தொடர்பான அரசியல் முடிவுகளை இலங்கை அரசே தீர்மானிக்கவேண்டும். இதனை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒற்றையாட்சி முறையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற தனது கொள்கையிலிருந்து ஜனாதிபதி மகிந்த விலகுவாரே ஆனால் மறுகணமே அரசாங்கத்திலிருந்து விலகிவிடுவோம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

# உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை தெரிவுசெய்யும் பணி ஆரம்பம்

கொழும்பு —

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கட்சித் தலைமையால் நியமிக்கப் பட்டிருக்கும் மாவட்ட வேட்பாளர் நியமன சபையினூடாக இந்தத் தெரிவுகளை மேற்கொள்வதற்கு அந்தக்கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கம்பஹா, களுத்துறை, தங்காலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு மற்றும் இரத்தினபுரியில் வேட்பாளர்கள் தெரிவு 15 ஆம் திகதியும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகல, அனுராதபுரம், பொலனறுவ ஆகிய மாவட்டங்களில் 21 ஆம் திகதியும் ,

நுவரெலியா, குருணாகல், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 22 ஆம் திகதியும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கென அந்தந்தத் திகதிகளில் வேட்பாளர் நியமன சபையின் அங்கத்தவர்கள் கூடி இந்தத் தெரிவுகளை மேற்கொள்வர் என அறியவந்துள்ளது.

# புகைத்தல், மதுபானம் குறித்த யோசனை அரசியல் அமைப்புக்கு முரணானதாம்!

## உயர் நீதிமன்றில் வழக்கு

கொழும்பு —



நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை குறித்த யோசனை, அரசியல் அமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி, உயர்நீதிமன்றத்தில் 10 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த யோசனையை தனிநபர் பிரேரணையாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் சமர்ப்பித்திருந்தார். இதற்கெதிராக ஓரியன்ட் லங்கா உட்பட 10 மதுபான விநியோக நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இந்த மனுக்களில் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உத்தேச பிரேரணை சரத்துகளில் மதுபான விநியோகத்தைக் கட்டுப்படுத்தல், அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பான விளம்பரங்களைத் தடைசெய்யும் யோசனைகள் அடங்கியுள்ளதாக மனுதாரர் தரப்பு தமது மனுக்களில் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரேரணை சட்டமூலமாக்கப்பட்டால் சுதந்திரமான விற்பனையில் ஈடுபடமுடியாத நிலை ஏற்படும். அத்துடன், ஊழியர்களுக்கும் தமது தொழிலில் பாதுகாப்பற்ற நிலை ஏற்படும் என்பதால் இது அடிப்படை உரிமை மீறல் என மனுதாரர் நிறுவனங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

# எஸ்.பி.திஸநாயக்க விரைவில் விடுதலை?

கொழும்பு —

சிறைச்சாலை அனுமதிச் சபையின் முடிவு கிடைத்தவுடன் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க விடுதலை செய்யப்படுவார் என சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

எஸ்.பி.திஸநாயக்கவின் மேன்முறையீடு ஏற்கனவே சிறைச்சாலை அனுமதிச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றத்தடுப்புச் சட்டத்தின் 14 ஆவது பிரிவுக்கமைய இரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் ஒருவருடத்தை நன்னடத்தையுடன் கழித்தால் அவரை விடுதலை செய்யமுடியும் எனக் குறிப்பிட்ட சிறைச்சாலை ஆணையாளர் - எனினும் அவர் மிகுதியாக இருக்கும் ஒருவருடத்தை இந்தச் சபையின் கண்காணிப்பின் கீழ் கழிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சிறைச்சாலை மன்னிப்புச் சபையில் - ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஹெக்டர் எஸ். யாப்பா, சிறைச்சாலை ஆணையாளர், சிறைச்சாலை பிரதான வைத்திய அதிகாரி, அனுமதிச் சபையின் செயலாளர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

# அரச சேவை, பொலிஸ் ஆணைக்குழுக்களுக்கு மாற்று ஏற்பாட்டை மேற்கொள்ள அமைச்சரவை தீர்மானித்துள்ளது

கொழும்பு —

அரச சேவைகள் ஆணைக் குழு மற்றும் பொலிஸ் சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் செயற்பாடுகளை அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கு முன்னர் இருந்ததைப் போன்று மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய அரச மற்றும் பொலிஸ் சேவையின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்களுக்கான அதிகாரங்கள் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

காலாவதியாகியிருக்கும் அரசியலமைப்புச்சபை மற்றும் அதன் கீழான அரச் சேவைகள் மற்றும் பொலிஸ் சேவைகள் ஆணைக் குழுக்களை நிறுவும் வரை இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அரசியலமைப்பு சபை நிறுவப்பட்டாலும், இந்த ஆணைக் குழுக்களை நிறுவுவதற்கு அதிக காலம் எடுக்கலாம் என்று அமைச்சரவையின் இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும்வரை அதனூடான செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்புகளை பொலிஸ் மா அதிபர், அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களிடம் கையளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக அதிருப்தி தெரிவித்திருக்கும் அரச சேவையாளர்கள் பலர், இதனால் இவ்விரு சேவைகளும் அரசியல்மயமாகும் என்று தெரிவித்துள்ளனர்.

# புலிகளின் நிதி சேகரிப்பை கட்டுப்படுத்துமாறு இங்கிலாந்து பேராயரிடம் மகிந்த வலியுறுத்து

கொழும்பு —

லண்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த கத்தோலிக்க தேவாலயங்களூடாக அழுத்தங்களைக் கொடுக்க வேண்டுமென்று- தற்போது இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்தின் வெஸ்மினிஸ்டரைச் சேர்ந்த பேராயர் மகோமெக் மர்பி கோணர் கர்தினாலிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் - புலிகள் வெளிநாடுகளில் சேகரிக்கும் நிதியை வறிய மக்களுக்காகச் செலவிடாது அவர்களின் இயக்கத்தைப் பலப்படுத்தவும் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குமே பயன்படுத்துகின்றனர் எனக் குற்றம்சாட்டியுமுள்ளார்.



இதேவேளை, வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாணும் போது வட அயர்லாந்து பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட முறை குறித்து கவனம் செலுத்துவது முக்கியமானது என்றும் கர்தினால் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைத்துக் கட்சிகளினதும் பங்களிப்புடன் பொது உடன்பாட்டைக் காண நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், சட்ட வல்லுனர்கள் சமாதான செயற்பாடுகளின் பங்குதாரர்களைக் கொண்ட குழுவை நியமிக்கவுள்ளதாகவும் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மகிந்த தெரிவித்தார்.

# யுவதி வல்லுறவுக்கு பின் படுகொலை; கொழும்பு மகளிர் அமைப்பு கண்டனம்!

யாழ்ப்பாணம் —

புங்குடுதீவில் இளம்பெண் தர்சினி கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக சுதந்திர ஆணைக் குழுவை நியமிக்குமாறு கொழும்பைத் தளமாகக் கொண்ட மகளிர் உரிமைகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மகளிர் உரிமைகளுக்காகச் செயற்படும் சமாதானம் மற்றும் ஜனநாயகத்துக்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

புங்குடுதீவில் கடந்த 17ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இளையதம்பி தர்சினிக்கு பல்வேறு தொடர்புகள் இருப்பதாக வெளியான தகவல்கள் கடும் கண்டனத்துக்குரியது. இது உண்மையற்றதுடன் சர்வதேச மகளிர் உரிமைகளுக்கான தரத்தை மீறும் செயலாகும்.


இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையையும் இந்த அமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட வேண்டும். விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர வேண்டும். தர்சினி படுகொலை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொண்டிங்கின் பொறுப்பான ஆட்டத்தால் அவுஸ்ரேலியா 359 ஓட்டங்களைப் பெற்றது

சிட்னி—

தென்னாபிரிக்காவுக்கு எதிராக சிட்னியில் இடம்பெற்றுவரும் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் 3 ஆவது நாளான நேற்று அவுஸ்ரேலிய அணி தனது



முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 359 ஓட்டங்களைப் பெற்று தென்னாபிரிக்க அணியைவிட 92 ஓட்டங்களால் பின் தங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலிய அணி தனது முதல் இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. இதில் பொண்டிங் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களுடன் இருந்தார்.

நேற்றையதினம் ஆட்டம் தொடங்கியவேளை ஹூசே இவருடன் இணைந்துகொண்டார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடினர். குறிப்பாக பொண்டிங் தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்களின் பந்துகளை சுலபமாக எதிர்கொண்டு அடித்தாடினார்.

இந்த நிலையில் அணி 184 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 111 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹூசே போத்தாவின் பந்தில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க சைமன்ஸ் வந்தார்.

இந்த நிலையில் மறுபக்கத்தில் நின்ற பொண்டிங் சதமடித்தார். இது இவரது 27 ஆவது சதமாகும். இவர்கள் இருவரும் பொறுப்புடன் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்




கையை அதிகரித்தவேளையிலும் அணி 222 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 174 பந்துகளில் 12 பவுண்டரிகள் 1 சிக்ஸர் அடங்கலாக 120 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொண்டிங் கலிஸின் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆகி வெளியேறினார்.

இதையடுத்து அவுஸ்ரேலிய அணி மேலும் 4 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றிருந்தபோது அடுத்தடுத்து சைமன்ஸ் 12 வோன் 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இதன்பின் லீ 17 மக்கில் 29 இறுதி விக்கெட்டாக கில்கிறிஸ்ட் 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அவுஸ்ரேலிய அணி தனது முதல் இனிங்ஸில் 95.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 359 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மக்ரா ஆட்டமிழக்காமல் 1 ஓட்டத்தைப் பெற்றார். பந்துவீச்சில் நெல் 4 லாங்வெல்ட் மற்றும் கலிஸ் இருவரும் தலா 2 பொலக் மற்றும்



போத்தா இருவரும் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 4 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் டி வில்லியர்ஸ் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

சிமித் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளார். பிரட்லீ ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

# துடுப்பாட்ட வரிசை மாற்றம்: இந்திய அணிக்கு நல்லதல்ல!

## பாகிஸ்தான் வீரர் லத்தீப் கருத்து

ஜலந்தர்—

துடுப்பாட்ட வரிசையில் மாற்றங்கள் செய்வது இந்திய அணிக்கு நல்லதல்ல என பாகிஸ்தான் முன்னாள் கப்டன் லத்தீப் எச்சரித்துள்ளார். ராகுல் ராவிட் தலைமையில் இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி துடுப்பாட்ட வரிசையில் பல அதிரடி மாற்றங்களைச் செய்து வெற்றிகண்டது.

இதுபற்றி லத்தீப் கூறுகையில் -

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை மிக வலுவாக உள்ளது. அதில் மாற்றங்கள் செய்யப்படுவது ஏன் என்று தெரியவில்லை. சில போட்டிகளில் இது வெற்றியைத் தந்தாலும், அணியின் துடுப்பாட்ட வீரர்களில் உள்ள நம்பிக்கையை அது குறைத்துவிடும். இந்திய அணி இதுபோன்ற மாற்றங்களைச் செய்யத் தேவையில்லை. பாகிஸ்தான் அணிதான் நடுத்தர வரிசையில் 'திணறுகிறது எனத் தெரிவித்தார்.

# இந்தியத் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிப்பு

லாகூர்—

இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடருக்கான உத்தேச பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்திய அணி இன்று லாகூர் புறப்பட்டுச்செல்கிறது.

இந்தத் தொடருக்கு இன்சமாம் தலைமையிலான 18 பேர்கொண்ட உத்தேச பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் புதுமுகம் ரபதுல்லா முகம்மது இடம்பெற்றுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் மற்றும் தொடக்க ஆட்டக்காரர் யாசீர் ஹமீத் அணியில் இடம்பெற்றுள்ளனர். முதல் டெஸ்ட் லாகூரில் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

உத்தேச அணி வருமாறு: இன்சமாம் (கப்டன்), முகமது யூசுப், யுனிஸ் கான், அப்ரிடி, ரசாக், கம்ரன் அக்மல், சமி, அக்தர், சொகைப் மலிக், நவீட் உல்- ஹசன், கனேரியா, அர்ஷத் கான், முகமது ஆசிப், உமர் குல், சல்மான் பட், அசில் கமால், ரபதுல்லா முகமது, யாசிர் ஹமீத்.



# ஆடுகளத்தைச் சேதப்படுத்தினார்; கங்கூலி பந்துவீசுவதற்குத் தடை!

கொல்கத்தா—

ஆடுகளத்தைச் சேதப்படுத்தியதாக ரஞ்சிக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பந்துவீசுவதற்கு கங்கூலிக்கு நடுவர் தடைவித்தார்.

தமிழ்நாடு, பெங்கால் அணிகள் மோதும் 4 நாள் ரஞ்சிப்போட்டி கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. முதலில் தமிழக அணி துடுப்பெடுத்தாடியது. இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடினால் மட்டுமே பாகிஸ்தான் தொடருக்குக் கௌரவமாகச் செல்லமுடியும் என்ற நெருக்கடியில் இருந்தார் கங்கூலி.

தொடக்கம் முதல் தமிழகம் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்தது. கங்கூலி சிறப்பாகப் பந்து வீசி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். தமிழக அணியின் வீரர் பதானி மட்டும் தாக்குப்பிடித்து 67 ஓட்டங்களைக் குவித்தார்.

சிறப்பாகப் பந்துவீசினாலும் இரண்டு முறை ஆடுகளத்தில் ஓடியதற்காக கங்கூலி எச்சரிக்கை செய்யப்பட்டார். விதிமுறைகளின்படி ஒரு பந்துவீச்சாளர் பந்துவீசி முடிந்தபிறகு விக்கெட்டை சுற்றிய 5 அடிக்குள் நடந்து வரக்கூடாது. இந்த வலயத்துக்கு ஊடாகத்தான் கங்கூலி நடந்துவந்தார்.

இரண்டு முறை எச்சரித்தார் நடுவர் ஹரிஹரன். இதை அலட்சியப்



படுத்திவிட்டு மூன்றாவது முறையும் ஆடுகளத்தைச் சேதப்படுத்தினார் கங்கூலி. பொறுத்துப் பார்த்த நடுவர் அவருக்கு இந்தப் போட்டியில் மேலும் பந்துவீசத் தடைவித்தார்.

# பொண்டிங் சாதனைமேல் சாதனை!



சிட்னி—

அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தற்போது நூறாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறார். அவர் நேற்றைய ஆட்டத்தின்போது 120 ஓட்டங்களை எடுத்தார்.

இதன்மூலம் நூறாவது டெஸ்ட் போட்டியில் சதம் அடித்த ஆறாவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார். ஏற்கனவே கொலின் கௌட்றே (1968), ஜாவிட் மியான்டட் (1989 - 90), கோடன் கிறீனிட்ஜ் (1989 - 90), அலெக் ஸ்ரீவோட் (2000), இன்சமாம் உல் ஹக் (2004 - 05) ஆகியோர் இந்தச் சாதனையைப் படைத்தனர்.

# டோனியைப் புகழ்கிறார் பாகிஸ்தான் வீரர் அக்மல்

கராச்சி—

கில்கிறிஸ்டுக்கு அடுத்ததாக விக்கெட் காப்பாளர் ஒருவர் சிறந்த துடுப்பாட்ட வீரராகக் கலக்குகிறார் என்றால் டோனியைத்தான் குறிப்பிடமுடியும் என புகழ்ந்து தள்ளியிருக்கிறார் பாகிஸ்தான் வீரர் கம்ரன் அக்மல்.

இந்திய கிரிக்கெட் அணியின் விக்கட் காப்பாளர் டோனியைப் போலவே பாகிஸ்தான் விக்கட் காப்பாளர் கம்ரன் அக்மலும் சிறந்த துடுப்பாட்ட வீரர். அவர் டெஸ்ட் போட்டியில் அதிக பட்சமாக 154 ஓட்டங்களும், ஒருநாள் போட்டியில் அதிக பட்சமாக 124 ஓட்டங்களும் எடுத்திருக்கிறார்.

இருந்தாலும் அவர் டோனியை மனதாரப் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:- என்னுடன் ஒப்பிடும்போது டோனி மிகச் சிறந்த வீரர். நான் சர்வதேசப் போட்டிகளில் இடம்பெற்று நிலைத்து நிற்பதற்கு அதிககாலம் ஆனது. ஆனால், டோனி தொடக்கத்திலேயே சர்வதேச போட்டிகளில் இடம்பெற்றுவிட்டார்.

அவர் மிகச்சிறந்த வீரராக உருவாகிவிட்டார். நெருக்கடியான நேரத்திலும்கூட சிறப்பாக விளையாடுகிறார். அது எல்லோராலும் முடியாது.



என்னைவிட டோனி சிறந்த வீரர். நான் அவருக்குப் போட்டியில்லை.

நாங்கள் இந்தியாவைத் தோற்கடிக்கவேண்டும் என்பதில் குறியாக இருக்கிறோம். டோனிக்கு எதிராகவோ அல்லது மற்ற எந்த ஒரு தனிப்பட்ட வீரருக்கு எதிராகவோ விளையாடவேண்டும் என்பது எங்கள் நோக்கம் அல்ல.

எங்கள் அணிக்கு இன்சமாம் கப்டனாகக்கிடைத்திருப்பது அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும். அனைத்து வீரர்களையும் ஒருங்கிணைத்து திறம்பட அணியை நடத்துகிறார்.

அவரது தலைமையில் எந்த அணியை வேண்டுமானாலும் வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் இருக்கிறோம். இவரைப்போல எந்த வீரரும் இவ்வளவு போட்டியில் திறனை வெளிப்படுத்தியது இல்லை. அவர் பாகிஸ்தான் அணியின் முதுகெலும்பாக இருக்கிறார்.

இந்திய அணியில் ஆபத்தான மனிதர் என்று நாங்கள் யாரையும் கருதவில்லை. ஆனால், கப்டன் ராவிட் மிகவும் மனக்கட்டுப்பாடு உள்ளவர். அவரது விக்கெட்டை வீழ்த்துவது கொஞ்சம் கடினமாக இருக்கும் என்றார் அவர்.

# பாகிஸ்தான் தொடரில் புதிய முறையில் பந்துவீசுவேன்!

## சகீர்கான் சொல்கிறார்

புதுடெல்கி—

பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும் என்று இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர் கான் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இடம்பெற்றுள்ள இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான சகீர்கான் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கையில் மேலும் கூறியதாவது:-

அதிக தூரத்தில் இருந்து ஓடிவந்து பந்து வீசும் முறையை மாற்றி தற்போது குறைந்த தூரத்திலிருந்து ஓடிவந்து பந்துவீச உள்ளேன். நான் புதிய முறையில் பந்துவீசும் முதல் சர்வதேச போட்டித் தொடர் இதுவாகும்.

எனவே, பாகிஸ்தான் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். அதேநேரத்தில் புதிய முறையில் பந்து வீசுவதால் பதற்றமும் உள்ளது. புதுமுறைப் பந்து வீச்சு உள்ளூர் போட்டிகளில் நன்கு எடுபட்டது. அதேபோல் தற்போது சர்வதேசப் போட்டிகளிலும் நல்ல பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

தற்போது இந்திய அணி சிறந்த அணியாக உள்ளது. தொடர்ந்து வெற்றி பெற்றுவரும் அணியில் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பாகிஸ்தான் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக அமைக்கப்படப் போவதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆடுகளத்தில் பந்துவீச ஆவலாக உள்ளேன். அதேபோல் இந்திய துடுப்பாட்ட வீரர்களும் அந்த ஆடுகளங்களில் சிறப்பாக ஆடத் தயாராக உள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

# ஷேன் வோனின் மனைவி விவாகரத்து கோருகிறார்



சிட்னி—

அவுஸ்ரேலியாவின் சுழல் மன்னன் வோனின் மனைவி சைமோன் விவாகரத்து கோரியுள்ளார்.

தனது சாதனைகள் அளவுக்கு சர்ச்சைகளிலும் சிக்கிகொண்டவர் வோன். 2003 உலகக் கிண்ணப் போட்டியின்போது ஊக்க மருந்து உட்கொண்ட சர்ச்சையில் சிக்கி ஒரு ஆண்டு தடையைச் சந்தித்தார். பின்னர் அணியில் மீண்டும் இடம்பெற்றார். கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக நடந்த ஆஷஸ் தொடரின்போது அவர் பிரிட்டன் பெண்களுடன் தகாத உறவு வைத்திருந்ததாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

இதைத்தொடர்ந்து வோனின் மனைவி சைமோன் அவரிடமிருந்து பிரிந்துசென்றார். இதன்பிறகு சைமோனை சமாதானம் செய்ய வோன் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. தற்போது சைமோன் விவாகரத்துக் கோரியுள்ளார். அவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளன.

# வழுக்கி விழுந்தார் ஜயசூரிய!

கிறிஸ்ட் சேர்ச்—



குளியலறையில் ஷம்பு எடுக்க முயன்றபோது வழுக்கி விழுந்தார் இலங்கை அணியின் முன்னாள் கப்டன் சனத் ஜெயசூர்ய. இதையடுத்து கிறிஸ்ட் சேர்ச்சில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 3 ஆவது ஆட்டத்தில் அவர் பங்கேற்க முடியவில்லை. 5 ஆட்டங்களைக்கொண்ட தொடரின் அடுத்த 2 ஆட் டங்கள் மடடுமல்லாது, அதைத் தொடர்ந்து நடைபெறும் முத்தரப்புத் தொடரிலும் அவர் விளையாடுவது சந்தேகம் என அணியின் முகாமையாளர் மைக்கல் திசேரா தெரிவித்தார்.

அவருக்குப் பதிலாக யாரையும் கேட்கவில்லை. இன்னும் 2 வார காலத்தில் தொடங்க உள்ள முத்தரப்புத் தொடர்வரை அணியுடனேயே ஜயசூர்ய இருப்பார். காயத்துக்கு உள்ளூரில் சிகிச்சை மேற்கொள்ளவுள்ளார் என திசேரா மேலும் தெரிவித்தார். இந்தியாவுக்கு எதிராக சமீபத்தில் முடிவுற்ற டெஸ்ட் தொடரிலிருந்து ஜயசூர்ய நீக்கப்பட்டதையடுத்து, கண்டனக் குரல்கள் ஓங்கி ஒலித்தன. இதன் பின்னரே நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் மீண்டும் இடம் பிடித்தார் அவர். ஆனால், விதி ஜயசூர்யவை விடுவதாக இல்லை.

# விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த

# ஜி.ரி. இசற் நிறுவனத்தால் பல்வேறு உதவி





யாழ்ப்பாணம் —

ஜி.ரி.இசற் வட புனரமைப்புத் திட்டத்தின் ஒரு நிகழ்ச்சி நிரலான புதிய உணவு உதவித் திட்டத்தினூடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட சில கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, அங்கு விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தி, உணவு உற்பத்தியை அதிகரிக்கும் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் பிரிவு, கமக்கார அமைப்புகள் ஊடாக பல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் வறிய மக்களுக்கு உணவுப்பொருட்கள், விவசாயிகளுக்கு விதை நெல், உணவுடனான வேலைத்திட்டத்தினூடாக - வடிகால், வீதிகள் புனரமைப்பு என்பவற்றோடு நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளி கருவிகள், நீர் இறைக்கும் பட்டைகள் என்பன வழங்கப்பட்டன.

மேலும் இந்தப் பகுதிகளில் செயலிழந்திருந்த கமக்கார அமைப்புகள் புனரமைக்கப்பட்டு கமநல சேவைத் திணைக்களத்தினூடாக பதிவுகள் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் செயலூக்கத்துடன் இயங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாகவும் வசதி குறைந்த விவசாயிகளின் முயற்சிகளுக்கு வலுவூட்டும் வகையிலும் இவர்கள் உறுப்புரிமை கொண்டுள்ள கமக்கார அமைப்புகள் சிலவற்றுக்கு உழவு இயந்திரங்கள், இழுவைப் பெட்டிகள், இரும்பு கலப்பைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக மருதங்கேணி பிரிவில் போக்கறுப்பு, நித்தியவெட்டை, செம்பியன்பற்று ஆகிய கமக்கார அமைப்புக்களும், கரைச்சி பிரிவில் தட்டுவன்கொட்டி கமக்கார அமைப்பும், யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு கமக்கார அமைப்பும் தெரிவுசெய்யப்பட்டு 19.12.2005 அன்று உழவு இயந்திர தொகுதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு தட்டுவன் கொட்டி கிராமத்திலும், மருதங்கேணி பிரிவுக்கான நிகழ்வு தாளையடியிலுள்ள திட்ட அமுலாக்கல் ஒருங்கிணைப்பு செயலகத்திலும் நடைபெற்றது.

இவை செயலக பிரதிநிதிகள், கமக்கார அமைப்புக்களின் உறுப்பினர்கள் முன்னிலையில் ஜி.ரி. இசற் வட புனரமைப்புத் திட்டத்தின் முதன்மை ஆலோசகரால் கமக்கார அமைப்பின் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டது.

மற்றும் நெடுந்தீவு கமக்கார அமைப்பின் சம்மேளனத்துக்கான உழவு இயந்திரம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் மேலும் சில கமக்கார அமைப்புக்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளி கருவிகள், நீர் இறைக்கும் பட்டைகள் என்பன வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பல்கலைக்கழக சூழலிலிருந்து படையினர் அகற்றப்படவில்லை

## மாணவர்கள் விசனம்

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக சூழலிலிருந்து இன்னமும் இராணுவத்தினர் அகற்றப்படாமை குறித்து பல்கலைக்கழக மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழக சமூகம் நடத்திய அமைதிப் பேரணி இராணுவத்தினரால் ஆயுதமுனையில் அடாவடித்தனமாக அடக்கி ஒடுக்கப்பட்டதையடுத்து நிலைமை மோசமடைந்து யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டது.

இதன்பின்னர் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் படையினராலோ, பொலிஸாராலோ இனிமேல் சோதனை செய்யப்படமாட்டார்கள் என இராணுவத்தளபதி உறுதியளித்ததாக யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

அத்துடன், பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதிகளில் பொலிஸார் பணியில் அமர்த்தப்படுவர் என்றும் அரச அதிபரிடம் உறுதியளித்தார்.

இதனையடுத்து பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் கடந்த திங்கள் முதல் வழமைக்குத் திரும்பியது.

அரச அதிபரிடம் உறுதியளித்தபடி பல்கலைக்கழக சூழலிலிருந்து இராணுவத்தினர் அகற்றப்படாமையால், மாணவர்கள் சுதந்திரமாக தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாதிருப்பதுடன் அந்தப் பகுதியில் மாணவர்கள் நடமாட அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குடிநீர் விநியோகத்திற்கு பவுசர் வாகனம் பெற்றுத்தர கோரிக்கை

யாழ்ப்பாணம் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட குடிநீர் கிடைக்காமல் கஷ்டப்படும் அனைத்து மக்களுக்கும் தேவையான குடிநீரை வழங்க ட்ராக்டரையும் குடிநீர் பவுசரையும் பெற்றுத்தரும்படி வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் பிரதேச செயலருக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி.தென் மேற்கு பிரதேச சபை பகுதியில் ஒரு ட்ராக்டரும் ஒரு தண்ணீர் பவுசரும் மட்டுமே இருப்பதால் அனைத்து மக்களின் குடிநீர் தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குடிநீரை ஒழுங்காக வழங்குவதற்கு மேலதிகமாக ட்ராக்டரையும், பவுசரையும் பொது ஸ்தாபனங்களிடமிருந்து பெற்றுத்தரும்படி பிரதேச சபை செயலாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் கேட்டுள்ளார்.

மாதகல் கிராமத்தில் வசிக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் குடிநீருக்குப் பெரிதும் அவதிப்படுகிறார்கள்.

இதேபோல் கட்டுடை, நவாலி, இடிகுண்டு போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்களும் குடிநீருக்கு கஷ்டப்படுவதுடன் தூர இடங்களுக்குச் சென்று குடிநீரைப் பெற்றுவருகிறார்கள்.

எனவே இந்தச் சிரமங்களை நீக்க விரைந்து செயற்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமுர்த்தி நிவாரணம்; மேன்முறையீடுகள்!

யாழ்ப்பாணம் —

சமுர்த்தி நிவாரணத்துக்கு விண்ணபித்திருந்தும் இதுவரை நிவாரணம் கிடைக்கப்பெறாதவர்கள் இது பற்றிய தங்களின் மேன்முறையீட்டை தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரிடம் இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக கையளிக்குமாறு யாழ். பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட 16 சிறுவர் இல்லங்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வடக்கு - கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளது.

கைதடி முதியோர் இல்லத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையில் மு.ப 11 மணியளவில் நடைபெறும் நிகழ்வில் இந்த உபகரணங்கள் வழங்கப்படவிருப்பதாக சிறுவர் நன்னடத்தை பிரிவு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

# செயல்முறை பரீட்சை

யாழ்ப்பாணம் —

முறைசாரக் கல்விப் பிரிவின் 2005 ஆம் ஆண்டுக்கான செயல்முறைப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல், நாளை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் தும்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2005.12.24 ஆம் திகதி அறிமுறை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் உரிய போதனாசிரியர்களும் சமுகம் தந்து பயன்பெறுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# பாகவதம் வாசிப்பு

யாழ்ப்பாணம் —

பகவான் ஸ்ரீ சத்திசாயி சேவா நிலையத்தில் நாளை முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை வரை தினசரி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் வரை பாகவதம் வாசிப்பு இடம்பெறும்.

13 ஆம் திகதி நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறுமென மேற்படி நிலையத்தினர் தெரிவிக்கின்றனர்.

# செய்திப் படங்கள்



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வில் கலந்துகொண்டு கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்திய மாணவர்களுக்கு நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ்.அருள்நேசன் அடிகளார் பரிசில் வழங்குவதைக் காணலாம். (113)



திருமறைக் கலாமன்றத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற சமாதான பஜனை வழிபாட்டில் இசைத்தென்றல் ம.யேசுதாசன், பிரதி இயக்குனர் ஜோ.ஜோண்சன் ராஜ்குமார், அன்றூ, அற்புதன் ஆகியோர் கலந்துகொண்டிருப்பதைக் காணலாம். (91)



கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் பிட்டியெல, ஊரி, பாலாவோடை ஆகிய கிராம இளைஞர்களிற்கான தலைமைத்துவப் பயிற்சி - ஊரி அ.மி.த.க பாடசாலையில் நடைபெற்றது.

பயிற்சியில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளுடன் வளவியலாளர்களையும் படத்தில் காணலாம். (91)




திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம், வர்த்தகர் சங்கம், பொற்பதி விளையாட்டுக்கழகம் ஆகியவை இணைந்து கடந்த 4.12.2005 அன்று நடத்திய இரத்ததான முகாமில் ஒரு காட்சி. இதில் 50 இற்கும் மேற்பட்டோர் இரத்ததானம் வழங்கினர்.

## இது பற்றிச் சிந்திப்போம்...!

> "எமக்கு முன்னால் நடப்பவர்களை தெரியாமலும் எமக்குப் பின்னால் வருபவர்களின் நடை வீச்சுப் புரியாமலும் இருப்பதனால் நாம் எமது நடையின் தன்மையை நினைத்து நாமே அகங்காரம் கொள்கிறோம். எம்மையே நாம் பெருமைப்படுத்திக் கூற முயல்கின்றோம்."



# வளங்கள் சிதறடிக்கப்பட்ட நிலையில் வடக்கு-கிழக்கு எவ்வாறு பேண்தகு அபிவிருத்தியை முன்னெடுப்பது?




**பொருளியற்துறைப் பேராசிரியர் நித்தியானந்தனுடனான நேர்காணல் சென்றவாரத் தொடர்ச்சி...**

இதுவரை நேரமும் இலங்கையரசின் எதிர்க்கணிய செயற்பாடுகளால் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிக் கலந்துரையாடினோம். 'இப்படியான காரணங்களை வைத்தே இவ் இனப்போராட்டமானது வலுப்பெற்றது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. நடந்ததை, முடிந்ததை விடுத்து எமது பிரதேசத்தினை நாம் எப்படி அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்வது இதற்கான தந்திரோபாயங்கள் என்ன?... என்பது பற்றி வேறு நாட்டு அபிவிருத்திப் போக்கோடு ஒப்பிட்டுச் சற்று விரிவாகக் கூறுங்கள்.

அபிவிருத்தி, வளர்ச்சி ஆகியவற்றை ஒன்றாகப் பார்த்தால் பொருளாதார மேம்பாடு என்று அதை அழைக்கலாம். அவ்வாறான பொருளாதார மேம்பாடு எவ்வாறு ஏற்படலாம். பொருளியல் ரீதியாக பிரதானமாக நான்கு காரணிகளில் அது தங்கியுள்ளது.

1. பௌதீக வளங்கள்– இயந்திர சாதனங்கள் போன்றன வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தேவையான வளங்கள் என்று கூறலாம். எண்ணை உற்பத்திக்குத் தேவையான பௌதிக வளமாக 'செக்கு' அமைகிறது.
2. மனித வளங்கள்– எம் எல்லோரையும் உள்ளடக்கும்.
3. இயற்கை வளங்கள்– எமது கடல், நிலம் போன்ற வளங்கள்
4. தொழில் நுட்பம்– தொழில்நுட்பம் தான் இன்றைய பொருளாதார மேம்பாட்டின் முக்கிய கருவென்றே கூறிவிடலாம்.

அணுகுண்டில் முற்றாக சிதைக்கப்பட்டதும், மூல வளங்கள் பெரிதாக குறைந்ததுமான ஜப்பான் எப்படி பொருளாதார வல்லரசானது?...

நீங்கள் கூறியது போல் ஜப்பானில் பௌதிக, இயற்கை வளங்கள் என்று பெரிதாகஎதுவும்இல்லை. ஆனால், அது அமெரிக்காவுடன்போட்டி போடக் கூடிய பொருளாதார வல்லரசாகமாறியமைக்கு அதன் தொழில்நுட்ப வளர்ச்சியே முக்கிய காரணமாகும். தொழில் நுட்பத்துக்கும், மனித வள மேம்பாட்டக்கும்இடையே தொடர்பு உள்ளது. மனித வளம் மேம்பட்டுச்செல்ல, தொழில் நுட்பமும் கூடிய அளவுக்கு அபிவிருத்தியடையும். அதனூடாக பொருளாதார மேம்பாடு ஏற்படும். அந்த வகையில் தான் ஜப்பான் முன்னணியில் நிற்கிறது.

அமெரிக்கா எப்படி பொருளாதார வல்லரசு ஆனது?...

ஏனைய நாடுகளைப் பொறுத்த வரையில் இயற்கை வளங்களும் கை கொடுத்துள்ளன. ஐக்கிய அமெரிக்கா இதற்கு ஒர் முக்கிய உதாரணமாகும். ஜப்பானுடன் ஒப்பிடும்போது எந்தவிதமான வேறு திறமைகளும் இருப்பதாகக் கூறமுடியாது. மனிதவளம் பெருமளவுக்கு திறமை பெற்றது என்றும், தொழில் நுட்பத்தினை வளர்த்தது என்றும் கூறமுடியாது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அந்த் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு என்று சவால்கள் எதுவும் இருக்கவில்லை. சவால்கள் நிறைந்தால் தான் பொருளாதார வரலாறு ஆர்வம் மிக்கதாக இருக்கும். ஜப்பான் எவ்வாறு மனித வளங்களையும், தொழில் நுட்பத்தினையும் வைத்துக் கொண்டு முன்னேறியது என்பது ஆர்வம்மிக்க விடயம். ஆனால், ஐக்கிய அமெரிக்கா இயற்கை வளங்களைக் கொண்டு முன்னேறிய நாடு ஆகும். அதற்காக அங்கு ஏனைய வளங்கள் முற்றாக இல்லை என்பது அல்ல.

வடக்கு-கிழக்கு தமிழினத்தின் மனிதவளம் ஏன் பயன்படுத்தப்படவில்லை?..

மனித வளம் மட்டும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்திவிட முடியாது என்பதற்கு நாங்கள்தான் சிறந்த உதாரணம். உலகில் மனித வளம் நிறைந்த இனங்களுள் நாங்கள் சிறப்பான இடத்தில் இருக்கிறோம். சில வருடங்களுக்கு முன்பு பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்த்தபோது பெரு வெற்றிகளைக் குவித்தது போன்று எவ்வளவு பெரிய உணர்வுபூர்வமான சம்பவங்களைக் குடும்பங்களில் கண்டிருக்கலாம். அதற்கான காரணம் என்ன? உண்மையில் இந்த உணர்வு பூர்வமான நிலைக்குக் காரணம் - மனித வளத்துக்குக் கூடியளவான பங்களிப்புச் செய்யக் கூடிய சில மாணவர்களைத் தயாரித்து விட்டிருக்கின்றோம் என்பதாகும். மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பல்வைத்தியர்கள், மிருக வைத்தியர்கள் எனப் பல்வேறு துறை சார்ந்தவர்களை வருடா வருடம் வெளியேற்றுகின்றோம். இவர்கள்உயர்படிப்பினையோ, நிபுணத்துவ கல்வியினையோ பூர்த்தி செய்த பின்னர் வடக்கு-கிழக்கு தமிழ் சமூகத்தின் மனித வள மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்துள்ளனரா? அவர்கள் எல்லோரும் தங்கள் பங்களிப்பினை செய்திருந்தால் நாங்கள் அபிவிருத்தி நோக்கி கணிசமான அளவில் முன்னேறியிருக்க முடிந்திருக்கும். ஆனால், உண்மையில் அவ்வாறான முன்னேற்றம் எங்களிடம் இருக்கிறதா? இதிலிருந்து தெரிவது என்னவென்றால் மனித வளம் மட்டும் அபிவிருத்தியையோ, வளர்ச்சியையோ ஏற்படுத்தி விடமுடியாது. மனித வளங்களை பௌதிக வளங்கள், எம்மிடமுள்ள இயற்கை வளங்கள் ஆகியவற்றுடன் எவ்வாறு இணைக்கின்றோம்? அந்த இணைப்புச் சரியாக இருந்தால் உற்பத்திதானே பெருகும். அபிவிருத்தி அடைந்த எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அது தான் நடக்கிறது.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் மனித வளங்களை எப்படிப் பயன்படுத்துகின்றனர்?...

மனிதவளத்தை ஜப்பான் பௌதிக வளங்களுடனும், ஐக்கிய அமெரிக்கா இயற்கை வளங்களுடனும், இங்கிலாந்து பௌதிக வளங்கள், இயற்கை வளங்கள் ஆகிய இருவகை வளங்களுடனும் இணைத்தே பயன்படுத்தின. இந்த இணைப்பு சரியாக இருப்பின் உற்பத்தி சேவைகளும், பொருத்தமான வகையில் வளரும். இதனை ஆங்கிலத்தில் Marrying the Human Resor ces with Phy sical and Natural Resources என்று கூறுவர். அதாவது மனித வளங்கள் ஏனைய வளங்களுடன் பொருத்தமாக மணம் முடிப்பது என்பதே இதன் கருத்து.

எங்களால் உருவாக்கப்பட்ட மனித வளங்கள் எல்லாம் (வடக்கு - கிழக்கு) எமது பிரதேசத்துக்கு அப்பால் அபிவிருத்தி செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. இது இரண்டு வகைப்பட்ட அபிவிருத்தி இழப்பீடாக எமது பிரதேசத்தில் தலைதூக்கியுள்ளது. ஒன்று இவர்களை உருவாக்கிய முதலீட்டுச் செலவீனம். வீண்விரயம் அடுத்து எமது பிரதேசத்தில் தலைதூக்கியுள்ளது. எமது பிரதேசத்திற்குத் தேவையான மனித வளம் - வீண் விரயம். இது தற்போது மிகப்பெரிய பிரச்சினையாக எமது வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பார்வையில் மேலோங்கியுள்ளது. இதுதொடர்பாக உங்களது கருத்து என்ன?

இதற்கு மூல காரணம் போர்க் கால சூழலாகும். எங்களால் உருவாக்கப்படுகின்ற மனித வளங்கள் எல்லாம் தென்னிலங்கைக்கும், பிறநாடுகளுக்கும் சென்று தமது சேவைகளூடாக அப்பிரதேசங்களின் அபிவிருத்தியை முன்னெடுக்கின் றன.

நாங்கள் எவ்வளவு டாக்டர்களைஉருவாக்குகின்றோம். ஆனால், எமக்கு ஏற் படும் கொடிய நோய்களுக்கு டாக்டர்களைத் தேடி தென்னிலங்கைக்கும் பிறநாடுகளுக்கும் ஓடவேண்டிய தேவை மேலோங்கி வருகின்றது. ஒவ்வொரு துறைகளிலும் பாண்டித்தியம் பெற்ற தமிழர்கள் எத்தனையே பேர் வெவ்வேறு நாடுகளில் உள்ளார்கள்.ஆனால், எமது பிரதேசத்துக்கு சேவையாற்ற யாருமே இல்லை. இந்நிலை மாற வேண்டுமெனில் சுமுகமான சூழல் வேண்டும். வசதியும், ஆற்றலும் உள்ளவர்கள் முதலீடு களை செய்யவும் , தொடர்ந்து தமது சேவைகளை நிரந்தரமாக முன்னெடுக்கவும் பாது காப்பானதும் அமைதியானதுமான சூழல் தேவை.

(தொடரும்)

– ஆர்.கே.மேனன் –

## வாரமொரு தொழில் வழிகாட்டி

### படச் சட்டம் (Frame) அமைத்தல்

**சிலன்**
**படச் சட்ட பொருத்துநர்**
**யாழ்ப்பாணம்.**

இன்றைய சமூகத்தில் பலதொழில்களுக்கான பெறுமதி குறைந்து கொண்டு வருகிறது. உதாரணமாக - நெசவு, மண் பானை, சட்டி வனைதல் போன்ற பல தொழில்களைக் குறிப்பிடலாம். சமூக மட்டத்திலுள்ள ஆளணி வர்க்கங்களின் எதிர் பார்ப்புகளுக்கமைய கொள்வனவு முறைமைகள் மாற்றம் பெற்று வருகிறது. இதனால் சில பாரம் பரிய தொழிற்துறைசார் உற்பத்திப் பொருட்களின் சந்தைப் பெறுமதி குறைந்து செல்கிறது. இதனால் இப்படிப்பட்ட தொழில்களை நம்பி வாழமுடியாத நிலை உருவாகியுள்ளது. ஆனால், இந்தப் படச் சட்டம் அமைத்தல் என்னும் தொழிலானது சற்று நாகரிகமான முறைமைக்கு மாற்றம்பெற்றாலும், உற்பத்திப் பொருளின் சந்தைப் பெறுமானம் அதிகரித்தே காணப்படுகிறது. ஆகவே, இதனை சுயதொழிலாக நம்பி முன்னெடுக்க முடியும்.

இத்தொழிலானது மிக இலகுவானது. அதிக இலாபத்தைத் தரக்கூடியது. வாடிக்கையாளரால் தரப்படும் படங்களுக்கு சட்டம் (Frame) அமைத்துக் கொடுத்தல். புதிதாகதாமும் பல காட்சிப் படங்களுக்கு சட்டம் அமைத்து விற்றல், வாகனங்களுக்கு படம் அமைத்தல் போன்ற வழிகளில் ஆர்வமும், ஆற்றலும் இருப்பின் முன்னேறமுடியும். இதனை விட முகம்பார்க்கும் கண்ணாடிகளைச் செய்து சந்தைப்படுத்தல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடமுடியும்.


இத்தொழிலுக்கான சந்தை வாய்ப்பு என்று நோக்கும் போது கோயில் உற்சவங்களில் காட்சிப் படுத்தலோடு இணைந்த விற்பனைக் கடைகளைப் போடலாம். சாதாரண கடைகளில் விற்பனை முகவர்களை உருவாக்கலாம். குடிபுகுதல், திருமணம் போன்ற சுபமுகூர்த்த நாட்களில் இந்தப் பொருளுக்கான சந்தை வாய்ப்பு அதிகரிக்கும்.

இதற்கு குறுகிய காலப் பயிற்சி போதும். தொழில் திறனை அதிகரித்து சந்தை வாய்ப்பினைப் பெருக்கலாம். இதற்குத் தேவையான மூலப் பொருள், மரச்சட்டம் ஆணி, கண்ணாடி, சிப்போட் என்பன.

**தேவையான உபகரணங்கள்**

1. சுத்தியல்
2. 7'' உருக்குக் குறடு
3. கண்ணாடிவெட்டும் கருவி
4. 24'' இருபக்க அடிமட்டம்
5. பற்றிறுக்கி துளைவு
6. பட்டைக்கல் 1/2 '' ஆணி
7. மரவேலை செய்யப்படுவதற்கான ஸ்குவில்ட்
8. கண்ணாடி ஷீட்
9. மரச்சட்டங்கள்
10. மேசை

முதலீடு தற்கால பெறுமதிகளைப் பொறுத்து அமையும். வருமானம் தொழில் விரிவாக்கத் தினையும், ஆர்வத்துடன் கூடிய தொழில் முயற்சி, சந்தைப் படுத்தும் திறன் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு அமையும்.






# அறுவடை வெற்றியினை தீர்மானிப்பது தரமான விதைகளின் தெரிவுகளேயாகும்

விவசாயத்தில் நல்ல வசூலைப் பெற அடிப்படையாக அமைவது நல்ல விதைகள்தான். உற்பத்தியினைப் பெருக்க பொறுக்கு விதைகளை உபயோகியுங்கள் என்று விவசாயத்துறையிலேயே விளம்பரங்கள் செய்கின்றார்கள். காய்கறிப் பயிர்களுக்கும் இது பொருந்தும்.

போட்ட விதை முளைக்கும் என்பது உண்மையே. ஆனால் கேட்டபலனைக் கொடுக்குமா? என்றால் சிக்கல் நிறைந்த வினாவாகப் போகும். பருவத்தில் பயிர் செய் என்பார்கள். பருவம்எப்படி முக்கியமோ, அப்படித்தான் தரமான விதைகள் தரமற்ற விதைகளை விட ஓரளவு வளரும். அறுவடையின் போது காலை வாரிவிடும்.

தரமான விதைகள் எப்படி இருக்கும்? கேட்கத் தோன்றும் இல்லையா. திடமாகவும், பருமனாகவும், சீரான வடிவுடனும் இருக்கும். பருவம், விதை, மணி ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. எந்த மண்ணுக்கு எந்த விதை ஏற்றது, விதைப்புக்கேற்ப பருவம் எது என்பதைக் கவனத்தில் கொண்டு காய்கறிச் செடிகளை பயிரிட வேண்டும்.

மிகச் சிறிய வயதுள்ள செடிகளிலோ, வயதான செடிகளிலோ இருந்து சேகரிக்கப்படும் விதைகள் தரமானதாக இருக்காது. அவ்விதமே நன்கு பழுக்காத காயிலோ அல்லது ரொம்பவும் கனிந்து அழுகிய பழத்திலோ இருந்து விதைகளை சேகரிப்பது கூடாது. சிலர் காய்நிலையில் பறித்து கிடங்கில் பழுக்கவைப்பார்கள். அவ்வாறு பழுத்தவற்றின் விதைகள் கண்டிப்பாகத் தரமற்றவைதான்.

விதை சேமிப்பதற்கு ஈரப்பதமான இடம் உகந்ததல்ல. அதிக காற்றோட்டம் விதையின் தரத்தினைப் பாதிக்கும். பூச்சி அரித்த விதைகளைப் பயன்படுத்தக் கூடாது. விதைகளைப் பொலித்தீன் பைகளில் இட்டு பத்திரப் படுத்த வேண்டும். விதைகளுடன் சாம்பல் கலந்து வைக்கலாம்.

தாய்ச்செடி விரைவாகப் பூத்துக் காய்க்கிறதா என்பதைக் கண்டறிந்து அதில் இருந்து விதைகளைத் தயார் செய்து கொள்ள வேண்டும். காய்கறிச்செடிகள் ஆண்டுக்கு மூன்று க்ட்டங்களில் பலன் தரும். முதல் பருவத்தில் நல்ல காய்ப்புள்ள செடிகள் எவை என்பதைத் தெரிவு செய்து அந்தச் செடிகளின் நடுப்பட்டக் காய்களில் இருந்து விதைகளை சேகரிக்க வேண்டும்.



கிராமப்புறங்களில் உள்ள மக்கள் - கீரை, வெண்டை, கத்தரி, மிளகாய் போன்றவற்றின் விதைகளை தங்கள் தோட்டத்துக் காய்களில் இருந்தே சேர்த்து வைப்பார்கள். நீங்களும் அந்தப் பழக்கத்தை வைத்துக்கொள்ளலாம். அன்றியும் தரமான விதைகளை அரசு அல்லது தனியார் விதைப்பண்ணைகளில் இருந்தும் பெறலாம்.

நீங்கள் வெண்டை, அவரை ஆகியவற்றின் காய்களை செடி, கொடிகளிலேயே நன்கு முதிர்ந்து நெற்று ஆகும் வரை விட்டு வைத்து விதைகளை சேகரிக்கலாம். நெற்றுகள் தாமே வெடித்து சிதறும் முன்பு பக்குவ நிலையில் பறித்து வைக்க வேண்டும்.

கத்தரி, தக்காளி போன்றவை செடியிலேயே நன்கு பழுத்த பிறகுதான் அதில் இருந்து விதைகளை எடுக்க வேண்டும். பழ விதைகள் சேகரிக்கும் போது அதில் பழத்தின் சதைப்பற்று இருக்கக்கூடாது. சதைப்பிடிப்பு இருந்தால் எறும்புகளும், பூச்சிகளும் விதைகளை அரித்துவிடும். பழத்தில் இருந்து பிரித்தெடுத்த விதைகளை நீர்விட்டுக் கழுவி உலர்த்திய பின் சேமிக்க வேண்டும்.

பீர்க்கு, சுரை, முருங்கை போன்றவற்றின் காய்களை மரத்திலேயே உலரவிட்டு அப்படியே எடுத்துவைக்க வேண்டும். புடல், பாகல், பறங்கி முதலியவற்றைக் கொடியிலேயே பழுக்க விட்டு பின்னர் பறித்து விதைகளைப் பிரித்தெடுக்க வேண்டும்.

இவ்வாறாக ஓரளவேனும் விதைகளை அவதானமாகப் பார்த்துத் தரமான விதைகளைப் பயிரிடுவதே அறு வடையின் வெற்றியினைத் தீர்மானிக்கும்.

விவசாயி மார்க்கண்டு

# போட்டிகள் நிறைந்த வணிக உலகில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் செல்வாக்கு

தரமான உற்பத்தியை நியாயமான விலையில் வழங்குதல், வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இது போட்டிகள் நிறைந்த வணிக சூழலில் நவீன தகவல்-தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமே சாத்தியமாகின்றது. எனவே, வேகமாக மாற்றமடைந்து வரும் உலக சூழ்நிலைகளுக்கு ஏற்ப வணிக சூழலிலும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் பங்கை அதிகரிகரித்தல் அவசியமாகின்றது.

சிக்கல்கள்(Complexities) நிறைந்த வணிக சூழலில் இயங்கிக் கொண்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு தகவல், தொடர்பாடல் சாதனங்கள் என்பவை அத்தியாவசியமான வளங்களாகக் கருதப்படுகின்றது. உடனுக்குடன் வணிக சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களை அறிந்து அவற்றுக்கேற்ப நிறுவனச் செயற்பாடுகளை மாற்றிக் கொள்வதற்கும், நீண்ட கால நோக்கில் தந்திரோபாயங்களை (Strategies) வகுத்து, வணிகச் சந்தர்ப்பங்களை (Business opportunities) மூலதனமாக மாற்றிக் கொள்வதிலும் (Capitalization) தகவல்-தொடர்பாடல் தொழில் நுட்பமானது முக்கிய பங்கு வகிக்கின்றது.

தகவல் - தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பது 'கணினியை அடிப்படையாகக் கொண்ட முறைமையின் ஒரு வடிவம்' என வரையறுத்துக் கொள்ள முடியும். இந்தத் தொழில்நுட்பத்தில் தனிநபர் கணினி(Personal Computer - PC)யானது பிரதான பங்கு வகிக்கின்றது.

## இணையத் தளத்தினூடான வணிக நடவடிக்கைகள்
(Business activities through the internet)

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உலகில் சிறிய நிறுவனம் முதல் பாரிய நிறுவனங்கள் வரை அவற்றின் செயற்பாடுகள் தகவல் - தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட அதீத வளர்ச்சி காரணமாக இலகுவான, விரைவான, கவர்ச்சிகரமான, வினைத்திறனான வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. இன்று தனிநபரோ அல்லது நிறுவனமோ தகவல் - தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முனைகின்ற போது அங்கு இணையத் தின் பயன்பாடு என்பது இன்றியமையாதது என்னும் அளவுக்கு இணையம் என்பது வணிக சூழலில் பிரதான ஊடகமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இணையம் (Internet) என்பது பல கணினி வலையமைப்புகளை (Compurer network) ஒன்றிணைத்ததாகக் காணப்படுகின்றது. நிறுவனங்கள் உள்ளூரில் மட்டுமன்றி சர்வதேச சந்தைக்கும் தகவல்களைப் பரிமாற்றம் செய்யும் விரைவான வினைத் திறன்மிக்க ஊடகமாக இணையம் விளங்குகின்றது. இதன் மூலம் சர்வதேச போட்டிச் சந்தைகள், வணிக நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை, - தகவல்களை உடனுக்குடன் வழங்கலாம், பெற்றுக் கொள்ளலாம் என்வும் கொள்ளளவு மிக்க பல்ஊடகத் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்ள முடிகிறது. இணைய தள சேவைகளை இனம், மதம், மொழி, நாடு போன்ற பேதங்களைக் கடந்து 24 மணித்தியாலங்களும் பெற்றுக்கொள்ளலாம். இணையத் தளமான வணிகத்தில் பின் வரும் நன்மைகளே விளைகின்றது.

வாடிக்கையாளர்கள் தமது தேவைகள், விருப்பங்களுக்கேற்ப உற்பத்திப் பொருட்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளமுடிகிறது.

உற்பத்தி நிறுவனங்கள் - செயற்பாடுகள் பற்றிய விரிவான தகவல்களை நிறுவன நிர்வாக உலகிலுள்ள அனைவருக்கும் தெரியப்படுத்த முடிகின்றது.

உற்பத்தி நிறுவனங்கள் தரமான உள்ளீடுகளை மலிவான விலையில் வழங்கும் வழங்குநர்களை சர்வதேச ரீதியில் கண்டறிய முடிகிறது.

கொள்வனவாளர் - விற்பனையாளர் ஒருவரையொருவர் சந்திக்காமலேயே வணிக செயற்பாடுகளில் ஈடுபட முடிகின்றது.

பல்தேசியக் கம்பனிகள் பல்வேறுபட்ட நாடுகளில் நிறுவியிருக்கும் தமது கிளைகளை இலகுவான முறையில் நிர்வகிக்க முடிகிறது.

விற்பனை நிறுவனங்கள் தமது விற்பனைப் பொருட்கள் பற்றிய விளம்பரங்களைக் கவர்ச்சிகரமான முறையில், குறைந்த செலவில் மேற்கொள்ள முடிகின்றது.

வணிக நிறுவனங்கள் தமக்குத் தேவையான மனித வளத்தை சர்வதேச ரீதியான மூலகங்களிலிருந்து திரட்டிக் கொள்வதற்கும் வலையமைப் பினூடாக பயிற்சிகள், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடிகிறது.

போட்டி நிறுவனங்கள் சர்வதேச வியாபார சந்தைகளின் நடவடிக்கைகளை - மாற்றங்களை உடனுக்குடன் அறிந்துகொள்வதற்கும், அவற்றுக்கேற்ப தமது செயற்பாடுகளைச் சீர்செய்து கொள்ளவும் முடிகின்றது.

வணிக செயற்பாட்டில் மாற்றூடகத்தின் தேவை, செயற்பாட்டுக்கான இடத்தின் தேவை போன்றன தேவையற்றதாகின்றது.

வணிகச் செயற்பாடுகளின் விரைவு, வினைத்திறன் என்பவற்றினை அதிக ரிக்கின்றது.

தகவல் பரிமாற்றம், தொடர் பாடல் என்பவற்றில் பூகோள எல்லைகள் - தடைகளைத் தகர்த்து, உலக மக்களை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த பெருமை இணையத்தையே சாரும்.



இலங்கையில் -



1. ஶ்ரீலங்கா ரெலிகொம் (Sri Lanka Telecom)
2. யுரேகா (Eureka)
3. லங்கா கொம் (Lanka Com)
4. சீ.கொம் (C.Com)
5. லங்கா இன்ரநெற் (Lanka Internet)
6. ஈஸ்ட் வெஸ்ட் (East West)
7. பான் லங்கா (Pan Lanka)

போன்ற நிறுவனங்கள் இணையத்தள சேவைகளை வழங்குகின்றன.

மின் அஞ்சல் (E-mail), குரல் அஞ்சல்(Voice - mail), இலத்திரனியல் வணிகம் (E-Commerce), மின்தாளிதள் (E-Zine), நிகழ்பட மாநாடு(Video Conferencing), இலத்திரனியல் நிதி மாற்றல் செயற்பாடு(E-Fund transfer activities) போன்றவற்றுச் சிறந்த தளமாக இணையம் விளங்குகிறது. (தொடரும்...)

த. ஜெகதீஸ்வரன்
முகாமைத்துவ கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

## கவிஞர் நாவண்ணன் எழுதிய
# புலிகளின் குரல் அமலன் அரங்கில் "அக்கினிக் கரங்கள்" நூல் அறிமுகவிழா


கிளிநொச்சி —

தமிழீழத் தாயகத்தில் இந்திய இராணுவம் மேற்கொண்ட அட்டூழியங்களைப் பதிவு செய்யும் கவிஞர் நாவண்ணன் எழுதிய "அக்கினிக் கரங்கள்" நூல் அறிமுக விழா புலிகளின் குரல் அமலன் அரங்கில் நேற்றுமுன் தினம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது. புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை காந்தரூபன் அறிவுச்சோலை துணைப் பொறுப்பாளர் விசாலகன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ வருவாய்த்துறைப் பொறுப்பாளர் மருதன் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரை திருமதி நாவண்ணன் ஏற்றிவைத்தார். பொது மாவீரர் கல்லறைக்கு விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை மலர் மாலையை அணிவித்தார்.

இந்த நிகழ்வின், வரவேற்புரையை புலிகளின் குரல் நிர்வாக இணைப்பாளர் இ.இராஜேஸ்வரன் நிகழ்த்தினார்.

நூல் அறிமுக உரையை நிதர்சனம் நிறுவனத்தின் போராளி வீரா நிகழ்த்தினார்.

கவிஞர் நாவண்ணன் நூலினை வெளியிட, இந்திய இராணுவக் கொடூரத்தால் பாதிக்கப்பட்ட சிவானந்தராஜா திருமதி. சண்முகலிங்கம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். சிறப்புப் பிரதியை தமிழீழ வருவாய்த்துறைப் பொறுப்பாளர் மருதன் பெற்றுக் கொண்டார். பிரதிகளைக் கடற்புலிகளைச் சேர்ந்த மோகன் வழங்கினார்.

நூலின் மதிப்பீட்டுரையை புலிகளின் குரல் நிகழ்ச்சி அமைப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார், விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை மூத்த அர்சறிவியலாளர் மு.திருநாவுக்கரசு நிகழ்த்தினார்.

ஏற்புரையை நூலாசிரியர் கவிஞர் நாவண்ணன் நிகழ்த்தினார்.

நன்றியுரையைப் புலிகளின் குரல் துணைப் பொறுப்பாளர் வி.செயல்வீரன் நிகழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ விளையாட்டுத் துறையினால் அடையாள அட்டை வழங்கப்படுகிறது

வட்டக்கச்சி —

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் அனைத்து மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழக அங்கத்தவர்களுக்குமான அறிமுக அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கான அறிமுக அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த விளையாட்டுக் கழகங்கள் மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு, தங்கள் கழக உறுப்பினர்களின் அறிமுக அட்டைகளை தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு முதலாம் திகதியிலிருந்து அறிமுக அட்டை பெற்றுக் கொள்ளாத விளையாட்டுக் கழகங்கள் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே, தங்கள் மாவட்டத்திலுள்ள பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு அடையான அட்டைகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர்.

அறிமுக அட்டையை பெறும் கழகங்கள் லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழகம், ஜொனி விளையாட்டுக்கழகம், கனகபுரம் விளையாட்டுக்கழகம், கிருஸ்ணபாரதி விளையாட்டுக்கழகம், அன்பு ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகம், ஸ்கந்தா விளையாட்டுக் கழகம், ஸ்கார் விளையாட்டுக் கழகம், சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம், செந்தாரகை விளையாட்டுக்கழகம், இளந்தளிர் விளையாட்டுக்கழகம் ஆகியனவேயாகும். (9)

# சிறப்புற நடைபெற்று முடிந்த எம்.ஜி.ஆரின் நினைவு நாள்



தமிழக முன்னாள் முதல்வர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 18 ஆம் ஆண்டுநிணைவு நாள் இறுதிநிகழ்வுகள் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத் தலைவர் நா.வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை கழகத்தின் உபதலைவர் கனகரத்தினமும், துணைச் செயலாளர் செ.சண்முகநாதனும் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைதுணைப் பொறுப்பாளர் வி.அருள் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன், டொக்டர்.திருலோகமூர்த்தி, பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் அ.மாணிக்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

எம்.ஜி.ஆரின் திருவுருவப்படத்துக்கான மலர் மாலையினை கழகத்தின் செயலாளர் யோகராசா அணிவித்தார்.

நினைவுரைகளை தமிழீழ எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வ.இ.செல்வக்குமார், பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்த கலைஞரும் அறிவிப்பாளருமான எஸ்.துரை ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா நிகழ்த்தினார்.

தொடர்ந்து, செல்வி.யோ.டிசாந்தினியின் நடனமும், விடுதலைப் பறவைகள் கலைஞர்களின் இன்னிசை மழை, தேசியத் தலைவரின் "தலை நிமிர்வு" மற்றும் எம்.ஜி.ஆரின் திரைப்படக் காட்சிகளும் அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிப் போராளிகள், காவல்துறையினர், எம்.ஜி.ஆர்.பற்றுணர்வாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு உளவளத்துணை அறிவூட்டல் பயிற்சி

கிளிநொச்சி —

கிளிநொச்சி அன்னை இல்ல உளவளத்துணை அறிவூட்டல் நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுகைப்படுத்தும் நோக்குடன், மாணவர்களுக்கான பயிற்சி நெறியொன்று வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்களில் 115 பேர் தெரிவு செய்யப்பட்டு, இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தின் போது, உயிரிழந்தவர்களின் நினைவு நாள் நிகழ்வில் உயிரிழந்த குடும்பங்களின் உறவுகளை ஆற்றுகைப்படுத்தும் பணியில் இந்த மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

# தமிழீழ மக்கள் தம் இலட்சியத்தையடைய தமிழகம் தார்மீக ஆதரவைத் தரவேண்டும்!

மதிப்புக்குரிய அமரர் மக்கள் திலகம் அவர்கள், இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் தொடர்பில் வகுத்திருந்த தெளிவானஅரசியல் அணுகுமுறை எமது தாயக மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியளித்தது. அவரின் இலட்சியங்களுடன் தமிழகத்துக்கு நல்லாட்சி வழங்கும் தாங்களும் புரட்சித் தலைவர் அவர்கள் பின்பற்றிய கொள்கைகளை தீவிரமாக தாங்கள் நடைமுறைக்கு இடவேண்டும் என்று அவாவுகின்றோம். அந்த வகையில் இலங்கை அரசு தலைவர் பாரத தேசம் வந்திருந்த போது ஈழத் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட தமிழக சகோததர்களின் உணர்வு வெளிப்பாடாக இலங்கைத் தலைவரை அனுசரிக்க தாங்கள் விரும்பவில்லை எனும் செய்தி அறிந்து, நாங்கள் உணர்வு மேலிடப் பெற்றோம் என தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கிளிநொச்சி எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகம் அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தக் கடிதத்தில்-

பிரிக்க முடியாத இன உறவும், இனத்துவ அடையாளமும் உடைய தமிழீழமும், தமிழகமும் இணைந்தும், பிணைந்தும் செயல்புரிய வேண்டிய வரலாற்றின் தார்மீகப் பொறுப்பினை எமது விடுதலைக்காக தாய்த் தமிழகம் சார்பில் தாங்கள் ஆற்ற வேண்டும் என அன்புரிமையோடு எதிர்பார்க்கிறோம்.

உலகில் ஈழ தேசத்தின் வரைபடம் என்பது சிங்கள அரசால் இரத்தமும், வியர்வையும், வதையும் மிகுந்த ஒன்றாக வரையப்பட்டுள்ளது. பாரத தேசத்தில் தமிழகம் உள்ளிட்ட பிற பிராந்தியங்கள் பெற்றுள்ள சுய நிர்ணயம், தன்னாட்சி, இறைமை என்பவற்றைப் பெற்று நிம்மதியாக வாழ்வதே ஈழதேசத்தவரின் ஆழ்மன அரசியல் அபிலாஷை ஆகும். இத்தகைய உயரிய இலட்சியத்தை அடைவதற்காக ஈழ மக்கள் எடுக்கும் எல்லா அரசியல் முயற்சிகளுக்கும், தாங்களும், தாய்த்தமிழகத்தின் சகோதரர்களும் அனைத்து தார்மீக ஆதரவினையும் தரவேண்டும் என்று உரிமையுடன் கேட்டுக் கொள்கிறோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடுகதி வாகனங்களினால் அதிகரித்து வரும் ஆபத்து!

பூநகரி —

பூநகரி வாடியடிப் பகுதியில் வாகனங்கள் கடுகதியாகச் செல்லும் நிலை காணப்படுகிறது. அதாவது, இங்கு நிறுத்தப்பட்டிருக்கும் வேகக் கட்டுப்பாட்டுக் கம்பங்களை அவதானிக்காது செல்லும் நிலை துரிதமாக அதிகரித்துவருகிறது. இதனால் வீதி விபத்துக்கள் அதிகமாக ஏற்படும் ஆபத்தும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக இவ் வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்களும், பணியாளர்களும், மக்களும் அச்ச உணர்வுடன் பயணித்து வருகின்ற நிலை காணப்படுகிறது. அத்தோடு அடிக்கடி வீதி விபத்துக்களும் ஏற்படுகிறது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் பாடசாலை மாணவர்களினதும், ஏனைய பொது மக்களினதும் நலன் கருதி, உரிய நடவடிக்கைளை எடுக்குமாறு மக்கள் கோரிவருகின்றனர். (பூ)

# நிரந்தரக் கட்டடமின்றி பூநகரி தபால் நிலையம்

பூநகரி —

பூநகரி தபால் நிலையம் நிரந்தரக் கட்டடம் இன்றி ஒருவரின் வீட்டிலேயே இயங்கிவருகின்ற நிலை காணப்படுகிறது.

1991 ஆம் ஆண்டு, பூநகரி மீது சிறீலங்கா இராணவத்தினர் மேற்கொண்ட வலம்புரி ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மேற்படி தபால் நிலையம், 2003ஆம் ஆண்டு பூநகரியில் மக்கள் மீள்குடியமரத் தொடங்கி, மூன்று ஆண்டுகளாகியும் இதுவரை நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவில்லை. இந்தத் தபால் நிலையத்தினை அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டும், இதுவரை அதற்கான வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த நிலையில் உரியவர்களை இதில் அக்கறை கொண்டு இதற்கான பணிகளை மேற்கொள்ளுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சமூக பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டங்களை செயற்படுத்த வேண்டும்

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கரிகாலன்



இந்த புதிய ஆண்டில் மக்களுக்கு உடனடியாகப் பயனளிக்கக் கூடியதும் தேச நலனையும், சமூக பொருளாதாரத்தையும் உயர்வடையச் செய்வதுமான திட்டங்களே முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனை கேட்போர் கூடத்தில் 2006 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக, அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மத்தியில் சரியான முறையில் தேவையான திட்டங்களை முன்வைத்து அதற்கான நிதியைச் சரியான முறையில் பயன்படுத்தி குறிப்பிட்ட காலத்தில் செய்துமுடிக்க வேண்டும். இந்தத் திட்டங்கள் மூலம் மக்களுக்கு உடனடியாக பலனளிக்கக் கூடிய, தேச நலத் திட்டங்களாக இருப்பதோடு, புதிய புதிய திட்டங்களை இனங் கண்டு சமூகப் பொருளாதா ரத்தை உயர்வடையச் செய் வதற்கு அனைவரும் பாடுபட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் அணியழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட கமநல விவசாய நீரியல், கால்நடை, பனை, தென்னை வள அபிவிருத்தி தொடர்பான சகல திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

திருக்குறள்

## நமது நோக்கு

### தமிழர்களை கொன்றழிப்பதன் மூலமாக யுத்தத்துக்கு செங்கம்பளம் விரிக்கும் அரசு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதேசமயம் பேரினவாத சக்திகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்கும் ஒரு கம்பீரமற்ற, தீர்வெடுக்கும் திறனற்ற ஜனாதிபதியாகவே மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தன்னை இனங்காட்டத் தொடங்கியுள்ளார்.

எரியும் பிரச்சினையை மேலும் கொளுந்துவிட்டு - இன்னும் கூறுவதானால் - சுவாலை விட்டு எரியவைத்து அதன் மூலம் அரசியல் அனுகூலங்களைப் பெறவும், பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தவும் முனையும் ஒருவராக அவர் இருப்பதால்தான் பதவியேற்று இரு மாதங்கள் முடிவதற்கு முன்னரேயே நாட்டை பேரழிவை நோக்கிய பாதையில் எந்தவிதமான கட்டுப்பாடும் அற்று செல்லவிட்டுள்ளார் என எண்ணத் தோன்றுகிறது.

ஷகட்டுப்பாடற்று' என்று இங்கே குறிப்பிடுவது பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் இனவாதத்தை கட்டவிழத்து விட்டிருப்பதையேயாகும். வடக்கு - கிழக்கு தமிழர் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களில், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் போர்நிறுத்த உடன்பாட்டை புறந்தள்ளிவிட்டு - ஒரு இராணுவ முற்றுகை நிலையை அரசு உருவாக்கியுள்ளதன் மூலம் குறிப்பிட்ட உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்வதற்கான முதல் சமிக்ஞையை வெளியிட்டுள்ளதாகவே கருதவேண்டும்.

ஆயுதப்படைகளினதும் அவர்களின் துணைப்படைகளினதும் சுயமிழந்த நிலையிலான நடவடிக்கைகள் தமிழ் மக்களின் இயல்புவாழ்வை முற்றாகச் சீரழிக்கத் தொடங்கியுள்ளதையும், அதனால் ஏற்படப்போகும் விளைவுகளையும் அரசு அறியாமல் உள்ளதாக எவரும் கூறினால் அதனை நம்புபவர் நாட்டுநடப்புகள் குறித்த யதார்த்தம் புரியாதவராக இருப்பர்.

புதிய ஜனாதிபதியும், புதிய அரசும் பதவியேற்ற பின்னர் நாடாளுமன்றில் செய்த கொள்கைவிளக்க பிரகடனமானது - அவர்கள் நாட்டையும், நாட்டின் சமாதான சூழலையும் எந்தவழியில் நெறிப்படுத்தப் போகிறார்கள் என்பதற்கான கட்டியமாக அமைந்தது என்றால் மிகையில்லை.

இப்போது அவர்களின் நெறிப்படுத்தலானது, நாட்டை எத்தகைய அதலபாதளத்தை நோக்கி தள்ளிவிட்டுள்ளது என்பதை காணக்கூடியதாக உள்ளது.

இப்போது மீண்டும் அரச பயங்கரவாதம் தமிழ்மக்களுக்கு எதிரான தனது ஊழிக்கூத்தை ஆரம்பித்துள்ளது. அதன் எதிரொலியாக இலங்கையானது மீண்டும் யுத்த பேரிகையின் இரைச்சலை இசைக்கத் தொடங்கியுள்ளது.

சமாதானத்துக்கான நுழைவாயில் ஒவ்வொன்றையும் இறுக மூடிவரும் அரச பயங்கரவாதத்தின் அராஜக நடவடிக்கைகள் மீண்டும் போரை வரவழைப்பதற்கான கதவுகளைத் திறந்துகொண்டும் வருகிறது என்பதை இன்று வடக்கிலும் கிழக்கிலும் தோன்றியுள்ள தமிழ்மக்களின் இயல்புவாழ்வுக்கான அச்சுறுத்தல் நிலை உறுதி செய்துள்ளது என்றே கூறவேண்டும்.

இதன் உச்சக்கட்ட நிகழ்வாக திருகோணமலையில் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டும் இருவர் படுகாயமடைந்தும் உள்ளதான கொடூர நிகழ்வு, திருமலையை மீண்டும் எரிமலை ஆக்கியுள்ளது.

திருமலையில் காலவரையறையற்ற ஹர்த்தாலுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது. இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மன்னார் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் ஒன்றின் போது வவுனியா மேற்குப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளரான மேஜர் ஜெயானந்தன் மற்றும் நாட்டுப் பற்றாளர் தேவராஜா வினோதன் ஆகியோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இவையெல்லாம் அரசின் - மகிந்தரின் சமாதான சிந்தனையின் இலட்சணத்தைக் காட்டுவதாகவே உள்ளன.

இந்தப் போர்நிறுத்த மீறல் சம்பவங்கள் யாவும் யுத்தத்தைத் துரிதப்படுத்தும் அரசின் உளப்போக்கையே வெளிப்படுத்துவதாக உள்ளன.


இதனைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும், நோர்வே அனுசரணையாளர்களும், சர்வதேச சமூகமும் வெறுமனே பார்வையாளர் நிலையில் நின்று அவதானித்துவிட்டு மௌனம் காப்பதில் அர்த்தமில்லை.

இந்த மௌனம் அவர்கள் மீதான தமிழ்மக்களின் அற்பசொற்ப நம்பிக்கையையும் இல்லாமற் செய்துவிடும் என்பதை வலியுறுத்துவது இங்கு அவசியமாகிறது.

உடனடியாக போர்நிறுத்த உடன்பாட்டின் விதிகளை முழுமையாக அமுல்செய்யுமாறு இலங்கை அரசின் மீது அழுத்தத்தை ஏற்படுத்த சர்வதேசம் தவறுமேயானால் - இலங்கை மீண்டும் யுத்த நெருப்பில் எரியும் நிலையை ஏற்படுத்துவதற்கான பொறுப்பையும் அவர்கள்தான் ஏற்கவேண்டிவரும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




சொல்லியே தீரவேண்டும்...

# சிங்களவர்களின் கட்சி அரசியலும் தமிழர்களின் மக்கள் அரசியலும்!



ஒரு நாட்டில் இரண்டு வகையான அரசியல் போக்குகள் உண்டு. ஒன்று மக்களரசியல், மற்றையது கட்சியரசியல்.

மக்களரசியல் மூலம் வலுப்பெற்ற கட்சியரசியலானது மக்களை ஏமாற்ற முற்படும் போது அவர்கள் சுயமாகச் செயற்பட்டு தமது உரிமைகளைப் பெற எத்தனிப்பது உலக வரலாறு கண்ட உண்மையாகும். விடுதலையடைந்த நாடுகளின் வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கின்றபோது அந்நாடுகள் விடுதலைபெறக் காரணம் பெரும்பாலும் மக்கள் புரட்சி எனப்படும் மக்களரசியலால் ஏற்பட்ட தாக்கமே என்பது புலனாகும்.

**இழப்புகளையும், நம்பிக்கையீனங்களையும் அனுபவித்த தமிழ்மக்கள் இனியும் பொறுக்க முடியாது என்கின்ற கட்டத்தில் தான் தமிழ் மக்களின் – மக்கள் அரசியல் பயணம் கொதித்தெழ ஆரம்பித்ததுள்ளது. இது பொங்கு தமிழ் என்றும் பொதுமக்கள் பேரணியென்றும் மகஜர் கையளிப்புக்களென்றும் விஸ்வரூபம் பெறலாயிற்று.**

இப்படிப்பட்ட மக்களரசியலே இன்று இலங்கை இனப்பிரச்சினையிலும் தலை தூக்கியுள்ளது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்றுவரை இலங்கையில் இனவாதத் தாண்டவக்கூத்து ஓயாது தலைவிரித்தாடிவருகின்றது. கல்வியில் பாதிப்பு, பொருளாதாரத்தில் வீழ்ச்சி, உயிர்ச்சேதம், உடைமைச் சேதமென எந்த அம்சங்களையும் இனவாதம் விட்டுவைக்கவில்லை. அனைத்து வழிகளாலும் தமிழினத்தைக் காலம்காலமாக இது துன்புறுத்தி வந்துள்ளது. இது தமிழ் சமூகத்தின் சந்ததி விருத்தியையே தாக்கியழிக்குமளவுக்கு முனைப்புப் பெற ஆரம்பித்துள்ளது. எந்த சர்வதேசநிறுவனங்களோ, சர்வதேச நாடுகளோ தமிழ்மக்களின் அழிவுகளுக்கு காரணம் கேட்கும் நிலையில் இருக்கவில்லை. தென்னிலங்கையில் இடம்பெற்ற சிறிய சிறிய அசம்பாவிதங்களுக்குக் காரணம் கேட்கவும், கண்டிக்கவும், கண்ணீர் விடவும் முற்பட்ட பொது அமைப்புகள் அப்பாவித் தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு கண்மூடி மௌனம் காத்துநிற்கின்றன. இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் தமிழ்மக்கள் வேதனையின் விளிம்பில் இருந்தனர். எமக்காக குரல் கொடுக்க எவருமேயில்லை எனும் நிலை தலைதூக்கியது. இதனால் பேரினவாத சக்திகளின் அடாவடித்தனம் மேலும் மேலும் அதிகரித்து நவாலி சென். பீற்றர்ஸ் படுகொலை, நாகர்கோயில் படுகொலை, நெடுந்தீவு குமுதினிப்படகு படுகொலை, மடுத் தேவாலயப் படுகொலை எனப் பல வடிவங்கள் பெறலாயிற்று.

கொலைகளுக்கப்பால் வாழ்வாதார உடைமைகளும் பறிக்கப்பட்டன. தமிழ் மக்களின் வன்முறை ரீதியான துன்பங்கள் தலைக்கேறியது ஒரு புறமிருக்க அரசியல் ரீதியான தீர்வுக்காகக் காத்திருந்த தமிழ்மக்களும் சிங்கள அரசியல் சக்திகளின் சதி நாடகங்களால் பல தடவைகள் ஏமாற்றப்பட்டனர். இலங்கையின் வரலாற்றில் எத்தனையோ தடவைகள் போர்நிறுத்த உடன்படிக்கைகள் உருவானது. பேச்சு மேடைகள் உருவாக்கப்பட்டன.

ஆனால் அத்தனையும் அர்த்தமற்ற அரசியல் நாடகங்கள் என்பதைத் தமிழ்மக்கள் உணர்ந்து கொண்டதுதான் இறுதியில் கண்ட மிச்சம்.

இப்படிப்பட்ட இழப்புகளையும், நம்பிக்கையீனங்களையும் அனுபவித்த தமிழ் மக்கள் இனியும் பொறுக்க முடியாது என்கின்ற கட்டத்தில்தான் தமிழ் மக்களின் - மக்கள் அரசியல் பயணம் கொதித்தெழ ஆரம்பித்ததுள்ளது. இது பொங்கு தமிழ் என்றும், பொதுமக்கள் பேரணியென்றும், மகஜர் கையளிப்புக்களென்றும் விஸ்வரூபம் பெறலாயிற்று.

இவையெல்லாம் சிங்கள அரசுக்கு எதை வெளிப்படுத்தி நிற்கின்றதென்றால் ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு இனத்தினது இறைமையைஅந்த நாட்டு அரசே பறிக்க முற்படும்போது அந்த இனம் தனது உரிமைகளை தாமே பெற்றெடுக்கும் என்பதை உறுதி செய்கிறது.

எனவே, வெறும் கட்சி அரசியலை இனி நாம் நம்பப் போவதில்லை. எமது மக்க ளரசியல் மூலம் மானத்தமிழரின் விடுதலையை வென்றெடுப்போம் என்ற உறுதியான செய்தியை இது வெளிப்படுத்தி நிற்கின்றது.

இன்று முழுவீச்சுடன் தொடங்கியுள்ள இந்த மக்களரசியலானது நிச்சயம் தமிழின் விடுதலைக்கு வழிகோலுமென்பதை தற்போது இடம்பெறும் மக்கள் புரட்சி, உணர்வு வெளிப்பாடுகள் புலப்படுத்தி நிற்கின்றன. எந்த ஒரு இனமும் அடக்கப்படும் பொழுது வெளிப்படும் உணர்ச்சிவேகத்தை சாதாரணமாக எடுப்பின் அதன்விளைவு நிச்சயம் பாரதூரமானதாகவே இருக்கும்.

இலங்கையில் இடம்பெறும் தமிழினத்தின் மக்களரசியல் தென்னிலங்கையின் கட்சியரசியலுக்கு பாடம் கற்பிக்கும் என்பது திண்ணம்.

- வெண்கட்டியான் -

செய்திக்கட்டுரை.....

எஸ்.ஜெயா

# அரச ஊழியர்களின் அவலம் நிறைந்த வன்னிப் பிரதேச கடமைக்கான பயணம்..

இன்று அரச வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெருமளவான பட்டதாரிகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் வேலை வாய்ப்புக்காக அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர்களாகவும் மற்றையோர் நிர்வாக சேவையாளர்களாகவும்கடமை புரிகின்றனர். இவர்களில் ஏறத்தாழ எழுபத்தைந்து சதவீதத்துக்கு மேற்பட்டோர் யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உதாரணமாக - முல்லைத்தீவு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால்- இங்கு முல்லைத்தீவு, துணுக்காய் என இரண்டு கல்வி வலயங்கள் உண்டு. இதில் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு மட்டும் இருநூற்று எட்டு (208) பட்டதாரிகள் ஆசிரியர்களாக வெளிமாவட்டத்திலிருந்து நியமிக்கப் பட்டுள்ளதாகப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது. இவ்வனைத்து இடத்தையும் யாழ். மாவட்டப் பட்டதாரிகள் பெற்றுக் கொண்டதாகவும், இதே போல் துணுக்காய் வலயத்தில் அறுபது பேர் (60) நியமனம் பெற்றுள்ளதாகவும், இதனாலேயே அந்த மாவட்டப் பட்டதாரிகளுக்கு நியமனம் கிடைக்கவில்லையெனவும் அப்பத்திரிகை தெரிவித்திருந்தது. இதனை அடிப்படையாக நோக்குகின்றபோது ஆசிரியத்துறையோடு, நிர்வாகத்துறையையும் கூட்டினால் எத்தனைபேர் முல்லைத்தீவு மாவட்டத்தில், வெளிமாவட்டங்களிலிருந்து வந்து சேவை புரிகின்றனர் என்பது புலனாகும்.

இங்கு ஆசிரியர் நியமனம் என்பது பற்றி நோக்குகின்றபோது, ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் அதிகபுள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களே, வெளிமாவட்டங்களுக்கு நியமனம் பெற்றதோடு, குறைந்த புள்ளி பெற்றவர்களும், பரீட்சையில் அறவே சித்தியடையாதவர்களையும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் எனும் அடிப்படையில் அவர்களின் சொந்த மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது எதனடிப்படையில் என்பது புலனாகவில்லை. அத்தோடு அரசியல், மற்றும் வேறுவிதமான அனுகூலங்கள் உடையோர் அதனைப்பயன்படுத்தி வெளிமாவட்ட நியமனங்களை ரத்துச் செய்து, தமது சொந்த இடங்களுக்கு அண்மையில் நியமனம் பெற்றுள்ளனர்.

ஆனால், பிரச்சினைகள் நிறைந்த வேறுவிதமான எதுவித அனுகூலங்களையும் பெறமுடியாத பட்டதாரிகளே, இப்பொழுது வெளி மாவட்டங்களில் கடமையாற்றுகின்றனர்.

இவர்களில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவை புரியும் யாழ்.மாவட்ட பட்டதாரிகளின் அடிப்படைப் பிரச்சினையில் இரண்டு முக்கியம் பெறுகின்றது.

**1. போக்குவரத்து வசதி**

**2. இருப்பிட வசதி**

இங்கு போக்குவரத்து வசதியென எடுத்துக்கொண்டால் திங்கள், வெள்ளி ஆகிய இரு தினங்களே முக்கியம் பெறுகின்றன. எல்லா ஊழியர்களும் திங்கள் முல்லைத்தீவு மாவட்டம் சென்று மீண்டும் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டத்திலுள்ள தமது வீடுகள் நோக்கிப் பயணிப்பர்.

திங்கட்கிழமையை எடுத்துக்கொண்டால் அனைத்து ஊழியர்களும் முகமாலையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி 7.30 இற்குப் புறப்படும் விரைவூர்ந்துப் பணியிலேயே பயணம் செய்ய முற்படுகின்றனர். இத்தோடு பொது மக்களும் முண்டியடித்துக் கொள்வதால், பெருமளவான இடநெருக்கடி ஏற்பட்டு பேரூந்தில் நெரிந்தும், மிதிபலகையில் தொங்கியுமே செல்ல முடிகின்றது.

இவ்வாறு சுமார் மூன்று மணித்தியாலங்கள் போராடியே முல்லைத்தீவைச் சென்றடைகின்றனர். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் செல்லும் ஒரு ஊழியனால் எவ்வாறு முழுமனதோடு சேவைபுரிய முடியும்?

ஏனெனில், ஒரு ஊழியர் காலை 5.30 மணிக்கு எழுந்து தனது காலைக்கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றிக்கொண்டு 6.00 மணிக்கு பேரூந்தைப் பிடித்து இராணுவ, மற்றும் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவில் வழி அனுமதி பெற்று, உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அதன் பின்பே 7.30 பேரூந்தினை அடைகின்றார்.

அதன்பின் எப்படியோ அவன் போராடி தனது அலுவலகத்தை அடைகின்ற போது 10.30 மணி ஆகிறது.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாத பலநிறுவன நிர்வாகிகள், குறிப்பாக சில பாடசாலை அதிபர்கள் அவர்களுக்கு லீவு வழங்குவதும், கண்டிப்பதும், சிவப்பு பேனாவால் கோடிடுவதுமாக தமது நிர்வாகத் திறமையை வெளிக்காட்டுகின்றனர்.

இது ஒரு ஆசிரியனிடமோ, அல்லது நிர்வாகியிடமோ ஆழமான மனப்பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. இதன்மூலம் அவர்களால் திறம்பட கடமையாற்ற முடியாதுள்ளது. இது ஒருவரிடம் இருந்து கிடைக்கும் உச்சப்பயன்பாட்டிற்கான, வெளியீட்டிற்கான சேவை என்பதைவிட வெறுமனே கடமைக்கான சேவை எனும் பயனற்ற வெளியீடாகவே அமைந்து விடுகின்றது.

முல்லைத்தீவில் பிரபல பாடசாலைகள் 8.10 இக்குத் தொடங்கி 2.10 இக்கு முடிவடைகின்றன. அப்படியானால் ஒரு ஆசிரியர் பாடசாலை விட்டவுடன் வெளியேறுவதனால், அடுத்தநாள் சனிக்கிழமையே யாழ்.மாவட்டத்துக்குப் புறப்பட வேண்டியுள்ளது. ஏனெனில், முல்லைத்தீவிலிருந்து 01.30 மணிக்கே கடைசி விரைவூர்ந்துப் பணியாகும். இதனால் ஒருவர் சனி சென்று ஞாயிறு திரும்ப வேண்டியுள்ளது. இதன் மூலம் ஒருவருக்கு உடல், மற்றும் உள ரீதியான நெருக்கடிகள் தோன்றுவதோடு, பொருளாதார வீண்விரையம் ஏற்படுவதையும் காணமுடியும். இத்தகைய பயணத்தின் மூலம் ஒருவரால் எந்தவொரு பலாபலன்களையும் அடைய முடியாது. அப்படியானால் இப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பது சிந்திக்க வேண்டிய தொன்றாகும்.

*1)* திங்கட்கிழமைகளில் முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் விரைவூர்ந்துப் பணி பேரூந்தில் பரந்தன் சந்திக்கு அப்பால் செல்பவர்களை மட்டுமே ஏற்றுதல்.

*2)* வெள்ளிக்கிழமைகளில் முகமாலை நோக்கி வரும் விரைவூர்ந்துப் பணிப்பேரூந்தில் முகமாலைக்கு மட்டும் செல்பவர்களையே ஏற்றுதல்.

இவற்றுக்கான தீர்வாக இடைக்கால பேரூந்து சேவைகளை நடாத்துதல் அல்லது திங்கள், வெள்ளி கிழமைகளில் அரச ஊழியர்களுக்கு மட்டும் என விசேட விரைவூர்ந்துப் பணி ஒன்றை ஆரம்பித்தல்.

*3)* முல்லைத்தீவு செல்பவர்கள் விசுவமடு, புதுக்குடியிருப்பு, வட்டுவாகல் (வெட்டுவாய்க்கால்) ஆகிய இடங்களில் பேரூந்தில் நிற்கும் பயணிகள் இறக்கி விடப்பட்டு வழி அனுமதிப் பத்திரம் சோதனை இடப்படுகின்றது. இதனால் நீண்ட நேரதாமதம் ஏற்படுகின்றது.

இதனைத் தவிர்ப்பதற்காக முகமாலை சோதனைச்சாவடியிலேயே விரைவூந்துப் பணியில் ஏறுபவர்களிடம் வழி அனுமதிப் பத்திரத்தை சோதித்து ஏற்றுதல், இரு காவல்துறை அதிகாரிகள் பேரூந்தில் பயணம் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளலாம். இதன்மூலம் இடைவிலகல், இடைச் செருகல் பயணிகளை நோட்டமிடமுடியும்.

இத்தகைய நடைமுறைகளை தமது கோட்பாட்டிற்குத் தகுந்த வண்ணம் செயற்படுத்த வேண்டியது மிக முக்கியமானதும், அவசியமானதும் ஒன்றாகும். இத்தகைய ஒழுங்குகள் சரியாகி விரைவாகஊழியர்கள்செல்லும்நிலைமை ஏற்படும் வரை ஒரு ஊழியர் முல்லைத்தீவுக்கு திங்கட்கிழமை பிந்தி வந்து வெள்ளிக்கிழமை முந்திச் செல்லுதல் தவிர்க்க முடியாதது ஒன்றாகி விடுகின்றது. இதனால் அவர் தனது கடமைகளை உதாசீனம் செய்கின்றார் என்றில்லை.

*1)* ஒரு ஊழியருக்கு மனைவி, பிள்ளைகள், உறவுகள் மற்றும் இல்லம் யாழ். மாவட்டத்தில் இருப்பதால் அவர் வருகை தவிர்க்க முடியாதது.

*2)* முல்லைத்தீவு மாவட்டத்தில் தொலைத்தொடர்பு வசதிகள் மிகவும் வரையறுக்கப்பட்ட நிலையில் இருப்பதோடு, பல இடங்களில் இல்லாதே இருக்கின்றது. இதனால் ஒரு ஊழியன் தனது முதிய தாய், தந்தையரின் உடல்நலன் மற்றும் குடும்ப சூழ்நிலைகளை அறிவதற்காக வீடு செல்வது கட்டாயமானதொன்றாக அமைகின்றது.

இவை அனைத்தையும் கட்டுப்படுத்தி ஒரு ஊழியனால் வேலை செய்வதென்பது முடியாத காரியமாகும். ஏனென்றால் ஒரு ஊழிய வெளியீடு என்பது உடல்சார்ந்த வலுப்பெறுமதியால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை, அது உளம்சார்ந்த சிந்தனைப் பெறுமானத்தையும் உள்ளடக்கியுள்ளதென்பதே உண்மையாகும். இதனால் தான் சிறந்த வெளியீடு என்பது ஆரோக்கியமான உடல், உள சக்திகளின் வெளிப்பாடாக அமைகின்றது.

இந்த மாவட்டத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் எதிர்நோக்கும் இரண்டாவது பாரிய பிரச்சினை இருப்பிட வசதியின்மையாகும். இந்நிலைமையானது பல ஊழியர்களை நிதானமாகச் செயற்பட முடியாது அகநிலைத் தாக்கத்திற்கு உட்படுத்துகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் கடந்த கால போர்ச் சூழல் காரணமாக பாரியளவில் சேதமடைந்து பின்பு தனது இயல்பு வாழ்க்கைக்கு மீட்சி பெறும் காலத்தில், இயற்கை வன்முறையாம் சுனாமியால் பாரியதொரு அழிவினை கண்டிருக்கிறது. இது தமிழீழப் பிரதேசத்தில் பெரும் அழிவுக்குட்பட்ட பிரதேசமாகக் கருதப்பட்டது. இதனால் இங்குள்ள கட்டிடங்கள், வீடுகள் அனைத்தும் தரைமட்டமானதால், சொந்த மாவட்ட மக்களே குடியிருக்க வசதியின்றி முகாம்களில் முடங்கிப் போயுள்ளனர்.

இந்தநிலையில் வெளிமாவட்ட ஊழியர்கள் எங்கு தங்குவது, அடிப்படைவசதிகள் அற்று, கொட்டில்களில் இயங்கும் பாடசாலை வளாகங்களிலா அல்லது முகாம் கொட்டில்களிலா என்பது சிந்திக்க வேண்டிய பாரியதொரு பிரச்சினையாகும்.

இவற்றுக்கான தீர்வு இன்று வரை கிடைக்கவில்லை. இதனால் பல ஊழியர்கள், பல இம்சைகளுக்கும், அவமானங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இப்பிரச்சினையினை தீர்வு காண வேண்டியது யாருடைய பொறுப்பு. ஒரு மனிதன் சுயகௌரவத்துடனும், தன்மானத்துடனும் வாழவும், விரும்பிய இடத்தில் விரும்பிய தொழிலைப் புரியவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைசாசனம் வகை கூறுகின்றது.

இத்தகைய உரிமையினை எமது நாட்டின் அரசியல் யாப்பும் உள்வாங்கியுள்ளது. அப்படியானால் இவர்களுக்கு விடை கூறுவது யார்?

கல்வி வலயங்களோ, தமிழீழ நிர்வாக சேவையினரோ இதனைக் கவனத்தில் எடுத்தல் மிக முக்கியமானதாகும்.

*1)* இவர்களுக்கான பொது விடுதியினை, இலவசமாக அல்லது மலிவு விலையில் அமைத்துக் கொடுத்தல்

*2)* இத்தனை இக்கட்டிலும் சேவை ஆற்றும் ஊழியர்களுக்கு இலவச காணித்துண்டுகளைப் பொருத்தமான இடத்தில் வழங்குதல்.

இதன்மூலம் இப்பிரதேசத்தில் வேலை செய்ய ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுவர்.

இவ்வளவு கனமான நிறைந்த பிரச்சினைகளை தம் மனதில் சுமந்துவந்து அதனை வெளிக்காட்டாது இன்முகத்துடன் உரையாடி தங்கள் கடமைகளைப் புரியும் வெளிமாவட்ட ஊழியர்களுக்கு நிர்வாக ஒழுங்கு என்ற பெயரில், நீங்கள் கொடுக்கும் தண்டனைகள் சரியா?தவறா? இது உங்கள் மனச்சிந்தனைக்கு ஒரு முடிச்சு

"புதுவருடத்துடன் புது வழி பிறக்குமா?"

## யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் செயற்பாடுகள் (SOND)

இன்று யாழ். மாவட்ட மக்களின் அபிவிருத்தியில் பல்வேறுபட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றன. இவ் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு கோணங்களில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இவ்வகைகளில் 2002ம் ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பும் (Social Organization Networking for Development) தனது செயற்பாடுகளை யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்தது. கிழக்குமாகாணத்தின் அக்கரைப்பற்றில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கும் இந்த நிறுவனம் யாழ். அரசடி வீதியில் 60 ஆம் இலக்கத்தில் அலுவலகத்தை அமைத்துச் செயற்பட்டு வருகிறது. இது சுருக்கமாக "சொண்ட்" (Sond) என்று அழைக்கப்படுகிறது.



இந்நிறுவனமானது யாழ்.மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளில் அதாவது வடமராட்சி, தென்மராட்சி, கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய் போன்ற ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராமியமட்ட அமைப்புக்களைத் தெரிவு செய்து அவற்றினூடாக களப்பணியாளர்கள் மூலம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இந்நிறுவனத்தினர் "புதிய வினைத்திறன்மிக்க சமூகத்தை உருவாக்குதல்" என்ற தொலைநோக்கை மையமாக வைத்தே தமது திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றனர்.

இந்நிறுவனத்தினரின் ஆரம்பகட்டச் செயற்பாடாக பயிற்சிகளையே குறிப்பிடலாம். அதாவது மேற்படி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமியமட்ட அமைப்புக்களின் அதாவது மாதர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், நூலகங்கள் என்பவற்றின் நிர்வாகிகளுக்கு தலைமைத்துவம், முகாமைத்துவம், நேரமுகாமைத்துவம், தொடர்பாடல் சிறந்த கூட்டங்களை நடாத்துவது எப்படி? போன்ற பயிற்சிகளை நன்கு பயிற்றப்பட்ட வளவியலாளர்கள் மூலமாக கிராமப்புற மக்களுக்கு விளங்கக்கூடிய எளிய முறையில் முன்னெடுத்து வருகின்றனர். இதனூடாக யாழ். மாவட்ட கிராமிய மட்ட அமைப்புக்களின் திறன்களை விருத்தி செய்து மேற்படி அமைப்புக்களை சிறந்த முறையில் இயங்கச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மேலதிக செயற்பாடாக கடந்த 2004ம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா போன்ற பிரதேசங்களிலும் மிகவும் சிறப்பாக இயங்கும் கிராமியமட்ட அமைப்புக்களுக்கு யாழ் மாவட்ட கிராமியமட்ட அமைப்புக்களின் நிர்வாகத்தினரைக் கூட்டிச் சென்று காட்டியதனூடாக யாழ்மாவட்டத்தில் குறிப்பிட்ட சில கிராமியமட்ட அமைப்புக்களை சிறப்பாக இயங்கச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்



இந்நிறுவனத்தின் அடுத்த திட்டமாக இளையோருக்கான சுய முன்னேற்றப்பயிற்சியைக் குறிப்பிடலாம். அதாவது மேற்படி கிரமிய மட்ட அமைப்புக்களுடாக திறமையான இளைஞர், யுவதிகளைத் தெரிவு செய்து சுயமுன்னேற்றப்பயிற்சிகளை வழங்கி சமூகத்தில் இளையோரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது என்பதை அவர்களுக்கு உணர்த்தி வருகின்றனர்.

மேலும் தமிழ் மக்களின் பாரம்பரிய கலை கலாச்சாரங்களை எடுத்துக்கூறும் இலக்கிய நூல்கள், அறிவியல் நூல்கள், சாதனையாளர் நூலகள், சமய நூல்கள் எனப்பல்வகைப்பட்ட நூல்களைக் கொண்டு தமது அலுவலகத்தில் நூல்கள் இரவல் வழங்கும் பகுதி ஒன்றினையும் அமைத்துக் கிராமிய மட்ட அமைப்புக்கள் ஊடாக இவற்றை இலவசமாக வாசகர்களுக்கு விநியோகித்தும் வருகின்றனர்.

இது தவிர கடந்த ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து மேற்படி அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கு கோழிவளர்ப்பு, ஆடுவளர்ப்பு, வீட்டுத்தோட்டம், உணவு தயாரிப்பு, போன்ற சுய தொழில்களுக்காக மீளளிப்புக் கடன்களையும் வழங்கி வருகின்றனர். இத்திட்டத்தினூடாக கடந்த ஆண்டு ரூபா ஐந்து லட்சமும், இவ்வாண்டு பனிரண்டரை லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



இந்நிறுவனத்தினர் சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் மிகவும் அக்கறை காட்டி வருகின்றமை பாராட்டுக்குரியது. அதாவது யாழ். மாவட்டத்தில் பல பாரிய விருட்சங்கள் அழிவடைந்துள்ளமையைக் கருத்தில் கொண்டு இயற்கையின் சமநிலையைப் பேணுவதற்காக மரம் வளர்ப்புத்திட்டத்தினூடாக வல்லைவெளி, காக்கைதீவு வெளி போன்ற பிரதேசங்களில் சவுக்கு, சமண்டலை, மலைவேம்பு போன்ற மரங்களை கணிசமான அளவுகளில் நாட்டியுள்ளனர். இது தவிர மேற்படி அமைப்புக்களின் நிர்வாகிகளுக்கு வீடுகளில் நாட்டக் கூடிய பயன்தரு மரங்களை வழங்கியுமுள்ளனர். மேலும் பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பாதகங்களை விழிப்புணர்வு மூலமாக எடுத்துக் கூறி பொலித்தீன் பாவனையைத் தடை செய்யும் நடவடிக்கையிலும் அக்கறை காட்டி வருகின்றனர்.

மேற்படி நிறுவனத்தினர் இந்த ஆண்டு முதல் சிறுவர் அபிவிருத்தியிலும் அக்கறை காட்டி வருகின்றமை பாராட்டுக்குரியது. சிறுவர்களின் ஆரம்பக் கல்விக்கு உதவுதல், சிறுவர்களை சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்கச் செய்தல், சிறுவயதிலிருந்தே தலைமைத்துவப்பணபை வளர்ப்பதற்காக சிறுவர்கழகங்களை அமைத்துக் கொடுத்து அவற்றை நிர்வகிக்கச் செய்தல் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாண்டின் மேலதிக செயற்பாடாக மேற்படி ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒவ்வொரு மிகவும் வறிய கிராமத்தை தெரிவு செய்து இக் கிராமத்தின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றி அதாவது அரும்பக் கல்வி , சுகாதார வசதி, மின்சார வசதி, என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்து வீட்டுத்தோட்டத்துக்கான விதையினங்களை பெற்றுக் கொடுப்பதனூடாக வீட்டுத்தோட்டச் செயற்பாட்டை ஊக்குவித்து, மேற்படி கிராமங்களிடையே ஒற்றுமையை வளர்த்தெடுத்து யாழ் மாவட்டத்தின் கிராமங்கள் அனைத்திலும் இவற்றை முன்மாதிரியாகச் செயற்பட வைத்து முன்னேற்றமடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இது தவிர தற்போது ஏற்பட்ட புயல் அனர்த்தத்தின் விளைவாகப் பாதிக்கப்பட்ட கோட்டை மீனாட்சிபுரம், மானிப்பாய் சூழாவடி கிராமம் ஆகியவற்றில் இருப்பிடங்களை இழந்த மக்களுக்கு தகரங்கள், சீற்கள், கூரை விரிப்புக்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தின் திட்டங்கள் அனைத்தும் "யாழ் மாவட்ட அபிவிருத்தியில்" முக்கிய பங்கை வகிக்கிற அதே வேளையில் எதிர்வரும் ஆண்டுகளிலும் மேலும் பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்லக் காத்திருக்கின்றனர். இவை அனைத்துக்குமூடாக

"புதிய வினைத்திறன் மிக்க சமூகத்தை உருவாக்குதல்" என்ற இவர்களின் கனவு நனவாவதற்கு மக்கள் அனைவரதும் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது என அவர்கள் கூறுகின்றனர்.

திருமால் திருஷாந்

# இலங்கையின் அண்மைக்கால வரலாற்றை இந்திய அரசாங்கம் மறந்து விடக்கூடாது

## தமிழக ஆய்வாளர் இராசதுரை தெரிவிப்பு

சென்னை—

இலங்கை அரசாங்கத்துடன் உறவுகளை மேற்கொள்ள விரும்புகின்ற இந்திய அரசு அண்மைக்கால வரலாறுகளை மறந்துவிடக் கூடாது எனத் தமிழக ஆய்வாளர் எஸ்.வி.இராசதுரை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தமிழ் நாட்டின் தினமணி நாளேட்டில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் -

அண்மையில் இந்தியாவுக்கு வருகை தந்திருந்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்சவின் சென்னைப் பயணம் ஏதோவொரு காரணத்தால் கடைசி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டு விட்டது.

கருத்துச் சுதந்திரத்தை மதிக்கும் இந்திய ஊடகங்களில் இலங்கை அரசின் கொள்கைகளுக்கும், சிங்கள அரசியல்வாதிகளுக்கும் கணிசமான ஆதரவு இருப்பதை அவர் அறியாதவரல்லர்.

1980 களில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனவாதத் தாக்குதல்களில் யாழ். நூலகம் எரிக்கப்பட்டது உட்படப் பல்வேறு நடவடிக்கைகளில் நேரடியான, மறைமுக ஆதரவு கொடுத்தவர்களில் ஒருவர் எனத் தமிழ் மக்களால் கருதப்படும் காமினி திஸநாயக்க போன்றோரும்கூட ஜனநாயகவாதிகளாகக் கருதப்படுவதையும் அவர் அறிந்திருப்பார்.

எனினும், அவருடன் வந்திருந்தவர்களில் ஒரு குறிப்பிட்ட நபரைப் பத்திரிகையாளர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பது ராஜபக்சவின் 'கூட்டணி தர்ம'த்தால் கூட இயலாததாக இருந்திருக்கும். அவரது கூட்டணியைச் சேர்ந்த இரண்டு சிங்களத் தீவிரவாத அமைப்புக்களில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமயவின் முக்கிய தலைவரான உதய கம்பன்பில என்பவரும் ஜனாதிபதியின் குழுவில் இடம்பெற்றிருந்தார்.

அந்தத் தீவில் போருக்கு எதிராகவும், அமைதிக்கும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்காகவும் குரல் கொடுக்கும் சிங்களக் கலைஞர்கள் மீது தொடர்ந்து வன்முறைகளைத் தூண்டிவிட்டு வருபவர் என்னும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளவர் அவர்.

அந்த நாட்டின் பாதுகாப்புக்காக அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக் குழுவில் அவரும் இடம்பெற்றிருப்பதாக ஒரு செய்தி அடிபட்டுக் கொண்டிருக்கிறது.

இது உண்மையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய கடமை இந்திய அரசாங்கத்துக்கு உண்டு.

ஜாதிக ஹெல உறுமயவும், மற்றொரு சிங்களத் தீவிரவாத அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுனவும் (ஜே.வி.பி.) விதித்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ராஜபக்ச தலைமையிலான கூட்டணி உருவாகியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தையும், சுனாமி நிவாரணத்திற்கு சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் புலிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் இரத்துச் செய்ய வேண்டும். இலங்கையில் கூட்டாட்சி முறையை உருவாக்குதல் என்னும் அடிப்படையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைக் கைவிட வேண்டும் என்பன இந்த நிபந்தனைகளில் அடங்கும்.

அதாவது, மீண்டும் உள்நாட்டுப் போரைத் தொடங்க வேண்டும் என்பதுதான் இந்த நிபந்தனைகளின் சாரம். இது ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு மட்டுமன்றி, சந்திரிகா ஆட்சியிலிருந்தவரை ராஜபக்சவும்கூட ஏற்றுக் கொண்டிருந்த கொள்கைக்கும் எதிரானதாகும்.

அந்தச் சமயம் சந்திரிகா அரசாங்கத்தில் பிரதமராக இருந்த ராஜபக்ச, கண்டியில் புத்தரின் பல் இருப்பதாகக் கருதப்படும் ஆலயத்துக்குச் சென்று அங்கு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான எல்லாவல மேதானந்தவின் காலில் விழுந்து அந்த ஒப்பந்தத்தின் பிரதியை வாங்கிக் கொண்டார். அதன் பிறகு அனைத்துச் சமயச் சடங்குகளையும் செய்த பின்னர் அந்த ஆவணத்தை புத்தரின் பல் இருப்பதாகச் சொல்லப்படும் பேழைக்கு முன்வைத்து வணங்கினார்.

இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் எல்லாருமே புத்த பிக்குகளின் ஆசியைப் பெறுவது வழக்கம். என்றாலும் தேர்தல் அறிக்கைகளையோ, கூட்டணி அரசியல் ஒப்பந்தங்களையோ அவர்களது காலடிகளில் இதுவரை சமர்ப்பித்ததில்லை.

பிற முதன்மையான அரசியல் கட்சிகள், அரசு இயந்திரம், இராணுவம் ஆகியவற்றில் விரவியுள்ள புத்த மதவாதத்தின் அதிதீவர வெளிப்பாடுகள் தான் ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைகள். உறுமய தலைவரின் முன் ராஜபக்ச மண்டியிட்டது இலங்கை அரசின் மற்றொரு வெளிப்பாடுதான்.

அந்த நாட்டின் நாடாளுமன்ற இடதுசாரிகளின் ஆதரவுடன் 1972 இல் இலங்கையில் புத்தமதம் அரசு மதமாக அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாகவே இன்று உறுமய சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே இந்த நாட்டை ஆள்வதற்கான உரிமை இருக்கிறது என இடைவிடாது கூறி வருகிறது.

சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தேவையான இனவாத அரசியலுக்கு அடிப்படையாக உள்ள புத்தபிக்குகள் ஆங்கிலேயரின் காலனியாதிக்கப் பண்பாட்டை எதிர்த்தல் என்னும் பெயரால் பழங்கால சிங்கள மன்னர்களின் ஆட்சியைச் சுட்டிக்காட்டி அந்த நாடு முழுவதுமே சிங்களவர்களின் ஆட்சியின்கீழ் இருந்ததாகக் கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றனர்.

உண்மையில் இத்தகைய கட்டுக்கதைகளைச் சாத்தியமாக்கியவர்கள் பிரிட்டிசார் தான. கண்டியில் கடைசி சிங்கள அரசை தோற்கடித்த பின்னர் அந்த அரசின் வாரிசுகளுடன் 1815-இல் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் புத்தமதமும், அதன் சட்டங்களும், சம்பிரதாயங்களும், பிக்குகளும், பௌத்தவழிபாட்டுத்தலங்களும் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்படும் எனப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கூறினார்கள்.

தாங்கள் பாதுகாக்க விரும்பிய அரசியல் சமநிலையைக் குறிக்கும் வகையில் சமுதாய மாற்றங்களுக்கும் சீர்திருத்தங்களுக்குமான இயக்கங்கள் தோன்றுமானால் அவற்றை வலுக்குன்றச்செய்வதற்கு பௌத்த மதம் பயன்படும் என பிரிட்டிஷார் கருதியதாக இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றறிஞர் கே.எம்.டி சில்வா கூறியுள்ளார்.

பிரிட்டிஷாருக்கு பின் வந்த சிங்கள ஆட்சியாளர்கள் இதனை இன்னும் ஆழமாகப் புரிந்து கொண்டனர். இலங்கை அரசாங்கம் ஒவ்வோராண்டும் தனது வரவு செலவுத்திட்டத்தில் பௌத்த விவகாரங்கள் துறைக்கு பெருந்தொகையான பணத்தை ஒதுக்குகிறது.

2004 இல் இப்படி ஒதுக்கப்பட்ட தொகை ரூ 18.5 கோடி. இப்படி ஒதுக்கப்படும் தொகையில் பெரும் பகுதி புத்தமடங்களுக்குப் போய் சேர்கிறது. எனவே அவர்களும் தங்கள் பங்குக்கு ஆட்சியாளர்களும் பிற முதன்மையான சிங்களக் கட்சிகளும் விரும்புகின்ற இனவாத அரசியலுக்கு தூபம் போடுகின்றனர். எடுத்துக்காட்டாக சுனாமி நிவாரணப் பணிகளைக் கூட்டாக மேற்கொள்வதற்கு சந்திரிகா அரசாங்கம் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்யவேண்டும் என்பதற்காக உறுமயவின் செயலாளரும் புத்தபிக்குவுமான ஒமல்பே சோபித தேரர் கண்டியிலுள்ள கோவிலுக்கு முன் அமர்ந்து சாகும்வரை உண்ணாநோன்பு இருக்கப்போவதாக அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள பிக்குகளும் இந்த ஒப்பந்தம் தேசத் துரோகமானது என அறிவித்து உண்ணாநோன்பைத் தொடங்கினர்.

சிங்களவர்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்படுவதாகப் பிரசாரம் செய்த உறுமய, கடந்த இரண்டாண்டுகளில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது வன்முறைத் தாக்குதல்களை நடத்தியது.

இந்தியாவில் மதச் சார்பின்மைக்கு ஆதரவாகவும், பெரும்பான்மை மதவாதத்துக்கு எதிராகவும் பேசுபவர்கள், சிங்கள பௌத்தவாதம் அந்த நாட்டின் அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் ஏற்படுத்திவரும் பாதிப்புக்களைப் பற்றி மௌனம் காக்கின்றனர். அந்த நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதல் நிபந்தனை சிங்கள பௌத்தத்தை அரசு மதம் எனக் கூறும் அந்த நாட்டின் அரசியல் சட்டப் பிரிவை நீக்குவதுதான்.

இந்த அரசியல் சட்டப் பிரிவுதான் தமிழர்கள் மீது பாரபட்சம் காட்டுவதற்கு சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்துக்கும் அதன் பிறகு ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்துக்கும் அடிப்படையாக இருந்து 1983 இல் இனக் கலவரத்தைத் தூண்டிவிட்டது.

இலங்கையுடன் தொழில் - வர்த்தக உறவுகளையோ, பாதுகாப்பு உறவுகளையோ வலுப்படுத்திக் கொள்வதையும் இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கப்படுவதையும் விரும்பும் இந்திய மத்திய அரசாங்கம் இந்த மிக அண்மைக்கால வரலாற்றை மறந்து விடக் கூடாது என்று அதில் எஸ்.வி. இராசதுரை குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவச் செயற்பாடுகளின் நோக்கம் சமாதான முயற்சியை இல்லாதொழிப்பதாகும்

## கண்டிக்கிறார் சிவநேசன் எம்.பி.

யாழ்ப்பாணம்

புதிய ஜனாதிபதி பதவியேற்று, பாதுகாப்பமைச்சராகவும் செயற்படும் வேளையில் வடக்கு - கிழக்கிலும், தென் பகுதியிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் இராணுவ கொடுமைகளுக்குள் வாழும் அவலம் தமிழ் மக்களுக்கு மிகுந்த அச்சத்தை உருக்கியுள்ளது.

இந்த நிலை தொடராமலிருக்க இராணுவ நடவடிக்கைகளை விரைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது மிகவும் அவசியமானதென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அண்மைய சம்பவங்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அண்மைக் காலமாகப் படையினர் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் சமாதானச் சூழலை கேள்விக்குறியாக்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. மக்களை அர்த்தமின்றிக் கொலை செய்வதும், சித்திரவதை செய்து உடல் ரீதியான பாதிப்புக்களைஏற்படுத்துவதும், சுற்றிவளைப்புத் தேடுதல் எனும் போர்வையில் தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்படுவதும், காணாமல்போவதும், கற்பழிப்புகளில் ஈடுபடுவதும், கேதீஸ்வரம், மண்டைதீவு போன்ற கிராமத்து மக்களின் நடமாட்டம் தடைப்படுத்துவது நாளாந்தம் நடைபெறும் சாதாரண நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன.

தமிழ் மக்கள் தமது ஜீவனோபாயத்திற்கு உழைக்கச் செல்லும் போதும், கல்லூரி, உயர் கல்லூரி, பல்கலைக்கழக, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவ, மாணவியர் கல்விச் சாலைகளுக்குச் செல்லும் போதும், மீள நிம்மதியாக வீடு திரும்புவோமா? உயிருடன் திரும்புவோமா? எனும் அச்சத்தோடு செல்கின்றனர் என்பதே யதார்த்த நிலையாகும்.

மக்களைப் பாதுகாத்து சமாதானத்தை நிலைநாட்டுவோம் எனக் கூறிக்கொண்டு மக்கள் மீது இராணுவ நடவடிக்கையைக் கட்டவிழ்த்து விடுவது முன்னைய ஜனாதிபதி சமாதானத்திற்கான போரை நடத்தியதற்கு ஒப்பானதாகவே அமைகிறது.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மிகுந்த இராணுவ அடக்கு முறைக்குள் வாழாதிருக்க வழிகாணல் வேண்டும். விசாரணைக்காகக் கைதுசெய்யப்பட்ட மக்களை விடுதலை செய்ய வேண்டும். காணாமற்போனோர் பற்றிய விபரம் தெரியப்படுத்தப்படல் வேண்டும். பாதிக்கப்பட்டோர் தொடர்பில் உடன் விசாரணை மேற்கொள்ள வேண்டும். நீதியான தீர்வு கிடைக்கவேண்டும்.

இந்த நிலைமைகள் தொடர்பில் மனிதநேய அமைப்புக்களும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் உண்மை நிலையை உலகறியச் செய்வதுடன் ஒடுக்கப்படும் மக்களின் பால் உதவும் கரங்களை நீட்டி அர்த்த மற்றுக் கைதுசெய்யப்பட்டோரை விடுதலை செய்ய உதவவேண்டும்.

சர்வதேச சமூகமும் இந்த விடயத்தில் அக்கறை காட்டத் தயங்குமேயானால் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளே மக்களைக் காப்பாற்றுவது தவிர்க்க முடியாதது. இவ்வாறான ஓர்



நிலைமை ஏற்படுமானால் அது சமாதானச் சூழலை முற்றாக ஒழித்து போர்ச் சூழலையே ஏற்படுத்தும் என்பது தவிர்க்க முடியாததே.

எனவே, வட கிழக்கு தாயகத்தில் சமாதான நிலை நீடிக்க வேண்டுமானால் அங்குள்ள இராணுவம் வெளியேற்றப்படுவதே முறையானது. மக்கள் மீது நடத்தும் இராணுவக் கெடுபிடிகளை உடன் நிறுத்தி கைதுசெய்யப்பட்டோரை விடுவித்துப் படையினரைத் தூண்டிவிடக்கூடிய கருத்துக்களையும், அதிகாரங்களையும் வழங்குவதை நிறுத்த வேண்டும்.

இந்த நிலையைப் பாதுகாப்பு அமைச்சும், ஜனாதிபதியும், அரசும் கவனத்தில் எடுப்பதன் மூலமே சமாதானச் சூழலைத் தக்கவைக்க முடியும் என்பதனைத் தெரி யப்படுத்துவதுடன் தொடர்ந்து அரச பயங்கரவாத நடவடிக்கை தமிழ் மக்கள் மீது திணிக்கப்படின் போர்ச் சூழல் உருவாகும் நிலையே மீண்டும் உருவாகுவது தவிர்க்க முடியாததாகிவிடும் இந்த நிலையைப் போக்க இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் விரைந்து செயற்படவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தமிழருக்கு உதவுவதைவிட வேறு தமிழ்ப்பணி எதுவும் இருக்க முடியாது

## தமிழக முதுபெரும் கல்வியாளர் வா.செ. குழந்தைசாமி

சென்னை—

இலங்கைத் தமிழருக்கு நியாயம் செய்ய உதவுவதை ஒத்த தமிழ்ப் பணி, தமிழ் இனப் பணி வேறு எதுவுமாக இருக்க முடியாதென தமிழ் நாட்டில் ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு நடத்தப்பட்டமை குறித்து தனது மகிழ்ச்சியையும், ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ள தமிழகத்தின் முதுபெரும் கல்வியாளரும், அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமானவா.செ.குழந்தைசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது -

ஈழப்பிரச்சனை தொடர்பாக தங்கள் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் பற்றிய செய்தியைப் பார்த்தேன்.

மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் கொண்டேன் இலங்கைத் தமிழருக்கு நியாயம் செய்ய உதவுவதை ஒத்த தமிழ்ப்பணி, தமிழ் இனப் பணி வேறு எதுவும் இல்லை.

அயல் நாட்டுடன் நல்லுறவு என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிரான இலங்கை இனவாதிகளின் செயற்பாட்டுக்கு இந்திய அரசு துணை போய்விடக்கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் தாங்கள் மேற்கொண்டிருக்கும் இந்த முயற்சிக்குத் தமிழினம் தலைவணங்கி நன்றி சொல்லும்.

இந்தத் தமிழர் நலம் விளையும் எண்ணற்ற தமிழ் உள்ளங்களோடு நானும் சேர்ந்து தங்களுக்கு மனம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரியப்படுத்திக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன் என்று வா.செ. குழந்தைசாமி அதில் தெரிவித்துள்ளார்.

## தமிழக மூத்த இடதுசாரி சிந்தனையாளர் தி.க.சி.

# மாமனிதர் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு கண்டனம்

சென்னை—

நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைக்கு தமிழக மூத்த இடதுசாரி சிந்தனையாளர் எழுத்தாளர் தி.க.சி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தினமணி நாளேட்டில் வெளியாகியுள்ள அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையில் நடந்த படுகொலை (27.12.2005) தலையங்கம் படித்தேன்.

தமிழர்கள் சார்பில் உரக்கக் குரலெழுப்பியவரும் அயராத மனித உரிமைப் போராளியும், எளிய மனிதருமான பரராஜசிங்கத்தின் படுகொலை இந்தியாவில் காந்தியடிகள், அமெரிக்காவில் மார்ட்டின் லூதர்கிங், லத்தீன் அமெரிக்க நாடான சிலியில் ஜனாதிபதி அலெண்டே, ஹொங்கோவில் சுதந்திர வீரர் பாடரிஸ் லுமும்பா மற்றும் பல மனித விடுதலைப் போராளிகளின் படுகொலையை நினைவூட்டியது.

மதவெறி, இனவெறி, மொழிவெறி, போர்வெறி, ஏகாதிபத்திய ஆதிக்கவெறி இவற்றில் ஊறித் திளைத்த பாசிஸ்ட் சக்திகளே இப்படுகொலைகளுக்கு மூலகாரணம் என்பதை உலக வரலாறு மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டுகிறது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நிர்வாகசேவை ஆட்சேர்ப்பு பரீட்சை சனியன்று

கொழும்பு—

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களை இணைத்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறுமென பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

குறித்த தினத்தில் பரீட்சையை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி மேற்படி பரீட்சையை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட போதிலும் யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து இந்தப் பரீட்சை பிற்போடப்பட்டது.

இந்தப் பரீட்சையின் மூலம் தற்பொழுது நிர்வாக சேவையிலுள்ள அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (தே)

# சமாதான முயற்சி குறித்து ஜே.வி.பியுடன் பேச்சு நடத்துவதற்கு நோர்வே முயற்சி!

இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜே.வி.பியுடன் நோர்வே தரப்பு பேச்சு நடத்தவிருப்பதாக நோர்வே தூதரகப் பேச்சாளர் ரொம் கிளாங்கொக் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் மட்டுமே நேரடிப்பேச்சுக்களை நோர்வே நடத்தி வருகிறது. இருந்தபோதும் அனுசரணையாளர் பணி குறித்த அதிருப்தியை வெளியிட்டுவரும் ஜே.வி.பியுடனாம் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருக்கின்றோம்.

அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் அழைப்பை ஏற்று நாம் அனுசரணையாளராகப் பணியாற்றுகிறோம். ஆதலால் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் மட்டுமே பதில் சொல்லக் கூடியவர் நாங்கள். இருப்பினும் எமது பங்களிப்புக் குறித்து பல விமர்சனங்களை முன்வைக்கும் ஜே.வி.பியுடன் பேச்சுக்களை நடத்துவதிலும் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச - வெள்ளைப் புலி என்றெல்லாம் கூறியிருந்தாலும் நாம் இது போன்ற விவாதங்களை நடத்திக் கொண்டிருக்க விரும்பவில்லை.

ஜே.வி.பியினருடனான சந்திப்பைப்போல இதர சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்தி அமைதி முயற்சிகள் தொடர்பான அவர்களது நிலைப்பாட்டை அறியவும் நாம் தயாராகி வருகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

## கச்சாயில் காயமுற்ற லான்ஸ் கோப்ரல் மரணம்

கொழும்பு—

கொடிகாமம் - கச்சாயில் நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் சிகிச்சை பலனளிக்காமல் மரணமானார். கடந்த மாதம் 21 ஆம் திகதி கச்சாயில் இடம்பெற்ற தாக்குதலில் 1 இராணுவச் சிப்பாய் பலியானதுடன் 6 அதிகாரிகள் காயமடைந்தனர்.

இவர்களில் 12 நாட்களாக உயிர்க்காப்பு இயந்திரத்தின் உதவியுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த லான்ஸ்கோப்ரல் கருணாரத்ன என்ற இளநிலை அதிகாரியே நேற்று முன்தினம் மரணமானார்.

# ராணுவ வன்முறை...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

திருகோணமலையில் கடந்த 2 ஆம் திகதி படையினரின் குண்டு வீச்சுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகி தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். லோகிதராஜா றொகான், சண்முகராசா கஜேந்திரன், மனோகர் வஜீகர், ஹேமச்சந்திரன், தங்கத்துரை சிவானந்தா ஆகியோர் இதில் கொலையுண்டனர்.

மேலும் நான்கு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இந்தச்சம்பவம் தமிழ் மக்களை மிகுந்த வேதனைக்கும், கோபத்துக்கும் உள்ளாக்கியிருக்கிறது.

அண்மைக் காலமாக படையினர் தமிழ்மக்கள் மீதான தேடுதல்கள், தாக்குதல்கள், கைதுகள், கொலைகள் என்பவற்றை அதிகரித்துள்ளனர். போர்நிறுத்த காலத்தில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் இத்தகைய செயற்பாடுகள் இயல்பு வாழ்வையும், சமாதானத்துக்கான நம்பிக்கையையும் மக்களுக்கு ஏற்படுத்துவதற்குப் பதிலாக- நம்பிக்கையீனத்தையும், விரக்தி நிலையையுமே உருவாக்கியிருக்கின்றன. இதனால் போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் அமுலில் உள்ளதா என்ற ஐயப்பாடு எழுகின்றது.

அப்பாவித்தமிழ் மக்களைப் படுகொலைசெய்துவிட்டு தம்மைத்தாக்க வந்த விடுதலைப்புலிகளைச் சுட்டுக் கொன்றுள்ளதாக கூறுவதை படைத் தரப்பும், அரசும் இப்போது வழமையாக கொண்டுள்ளன.

இம்மாணவர்களையும் கொலை செய்து விட்டு தம்மைத்தாக்குவதற்கு கொண்டுவரப்பட்ட குண்டு வெடித்ததாலேயே அவர்கள் கொல்லப்பட்டனர் எனப்பரப்புரை செய்கின்றன. ஆனால், மாணவர்கள் மீது மிக அருகில் இருந்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மருத்துவ அறிக்கைகளே உறுதி செய்திருக்கின்றன.

போர் நிறுத்தகாலத்துக்கு முன்னர் தமிழ் மாணவர்கள் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டனரோ அவ்வாறு இப்போதும் படையினரால் இலக்கு வைக்கப்பட்டு சாகடிக்கப்படுகின்றனர்.

சமாதானத்துக்கு இடமளிக்காமல் மேற்கொள்ளப்படும் இச்செயற்பாடுகளை யுத்த நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நடவடிக்கைகளாகவே கருதவேண்டியுள்ளது.

மாணவர்கள் மீதான தொடர்ச்சியான இத்தகைய தாக்குதல்கள் மூலம் ஒட்டுமொத்த தமிழ் மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது. பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் படையினர் புரியும் கொலைகள் விரக்தியின் விளிம்புக்கு தள்ளியுள்ளன. இதனால் அவர்கள் இராணுவ வன்முறைக்கு எதிராக செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மிலேச்சத்தனமான படுகொலைகளால் மாணவர்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்துவிடலாம் என்று அரசு கருதுகிறது. இது மிகவும் தவறான கணிப்பீடு என்பதனை கடந்தகால வரலாறுகளை நினைவில் வைத்திருக்கும் அனைவரும் அறிவார்கள்.

இதனை மறந்து பேரினவாதிகள் தமிழ் மக்கள்மீது இராணுவ அடக்குமுறைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வார்களாயின் அதன் மோசமான விளைவுகளை அவர்களே எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். படையினரின் கொடூரமான இந்தக் கொலைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன், கொல்லப்பட்ட மாணவர்களினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் என குறிப்பிடப் பட்டுள்ளது.

# திருகோணமலையில் நேற்றிரவு முகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல்!

திருகோணமலை—

திருகோணமலை துவரங்காட்டில் இராணுவத்தினரின் மினிமுகாம் மீது நேற்றிரவு இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றிரவு 9 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் இதன்பின்னர் பதிலுக்கு இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

கைக்குண்டுத் தாக்குதல் நடைபெற்ற பின்னர் அந்தப் பகுதியில் பெருமளவு இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தியதுடன், அந்த வீதியால் சென்ற மக்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர்.

இதேவேளை திருகோணமலை மிகிந்தபுரம் சந்தியில் விமானப் படையினரின் வாகனம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. கைக்குண்டு வாகனத்துக்கு வெளியே வீழ்ந்து வெடித்ததினால் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (10,4)

## பருத்தித்துறையில்...

சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12-14)

## ஊர்காவற்துறை...

எடுத்துவரப்பட்டு பிரேதபரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இனந்...

சில குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் என்று சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## அட்லஸ்...

உரிமையாளரான பாலேந்திரன், பளையைச் சொந்த இடமாகக் கொண்டவர் என்றும் இவரது மகன் காண்டீபன், சக்தி வானொலியில் அறிவிப்பாளராகப் பணிபுரிகிறார் எனவும் தெரியவருகிறது.

## புளொட்...

சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பன காணப்பட்டன.

இதனடிப்படையில் வவுனியா பொலிஸாருக்கு நேற்றுக்காலை தகவல் கொடுக்கப்பட்டது. இதனையடுத்து உறவினர்களுடன் வவுனியா பொலிஸார் அனுராதபுரத்துக்குச் சென்று சடலத்தை இனங்கண்டனர்.

## இரண்டாவது...

மாணவர்களின் இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளதால் ஹர்த்தால் இன்று நடைபெறமாட்டாது என்றும் நாளைமுதல் காலவரையறையின்றி ஹர்த்தால் அனுஷ்டிப்பது என்றும் திருகோணமலை மாணவ சமூகம் அறிவித்துள்ளது.

மாணவர்களின் பூதவுடல் அவர்களது இல்லங்களில் இருந்து இன்று காலை எட்டு மணிக்கு ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் வைக்கப்பட்டு இறுதி அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## முல்லைத்தீவு...

பகுதிகளில் விசேட பயிற்சியில் ஈடுபட்டதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் - புலிகளின் ஆயுதக் கப்பலுக்கும், கடற்புலிகளின் பயிற்சி நடவடிக்கைகளுக்குமிடையில் ஏதாவது தொடர்பிருக்கலாமெனப் பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்துவருகிறது.

அதேவேளை - விடுதலைப் புலிகள் கப்பலிலிருந்து ஆயுதங்களை இறக்கி முல்லைத்தீவிலுள்ள கடற்புலிகளின் முகாமுக்குக் கொண்டு சென்றதாக உத்தியோகபூர்வமற்ற தகவலொன்று கடந்த 28 ஆம் திகதி மாலை கடற்படை மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்துள்ளது.

எனினும் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் தொடர்பாகக் கூடுதலான கண்காணிப்புடன் இருப்பதாகவும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைத்தவுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனப் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். (தே)

# முள்ளிக்குளம் கிரனேட் தாக்குதல்; விடுதலைப் புலிகள் கண்டனம்!

வவுனியா—

வவுனியா-முள்ளிக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் மீது இராணுவத்தினர் கிளைமோர் தாக்குதல் நடத்தியது குறித்து வவுனியா மாவட்ட அரசியற்துறை கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் நேற்று வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் பேண்ட்டுடன் பேச்சுக்களை நடத்தினர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான புளியங்குளம் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

சமாதானத்தின் மீது விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் நம்பிக்கையை இல்லாது செய்வது போன்ற நடவடிக்கையை அரச படைகள் செய்துவருவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் கொண்டு சென்றனர்.

இந்தச் சந்திப்பின்போது தமது அரசியற்துறை போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு கடுமையான கண்டனத்தைத் தெரிவித்ததாகவும், இந்தச் சம்பவம் எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு சமாதானத்தின் மீது இருக்கும் நம்பிக்கைக்கு கேடு விளைவிக்கக்கூடியது என்றும் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டு தமது அறிக்கையைத் தயாரித்துக்கொண்டனர். சம்பவத்தில் கொல்லப்பட்ட பொதுமகனின் வீட்டுக்குச் சென்று அவரின் குடும்பத்தினருக்கு தமது அனுதாபத்தையும் அவர்கள் தெரிவித்தனர்.

# மூவரைக் காணவில்லை; உறவினர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்டத்தில் நேற்றும் மூவரைக் காணவில்லை என யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த து.சுரேஸ் (வயது-20), ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த மார்க்கண்டு இலங்கேஸ்வரன் (வயது-28), குமாரசாமி மகேந்திரன் (வயது 29) ஆகிய மூவருமே காணாமற் போயிருப்பதாக யாழ்.மனிதஉரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளார்.

குமாரசாமி மகேந்திரன், மார்க்கண்டு இலங்கேஸ்வரன் ஆகிய இருவரும் கடந்த 31 ஆம் திகதி வீட்டில் இருந்து புறப்பட்டதாகவும் இவர்கள் இருவரும் வீடுதிரும்பவில்லை எனவும், கடந்த 14 ஆம் திகதி வீட்டில் இருந்து புறப்பட்ட சுரேஸ் இன்னமும் வீடு திரும்பவில்லையெனவும் உறவினர்களால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் காணாமற் போவோர் தொடர்பான முறைப்பாடுகள் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருவதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி தெரிவித்தார்.

# புலிகளுடன் கைதிப் பரிமாற்றமா? பிரதமர் அடியோடு நிராகரிப்பு!

விடுதலைப்புலிகளுடன் - இலங்கை அரசு கைதிகள் பரிமாற்றத்தை மேற்கொள்ளத் தயாராக இல்லை என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ம் திகதி பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை சந்தித்து பொலிஸாரின் விடுதலை குறித்து கலந்துரையாடுவதற்காக பாதுகாப்பு அமைச்சகத்துக்குச் சென்ற பொலிஸாரின் உறவினர்களிடமே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கேட்கின்ற அனைத்தையும் நிறைவேற்ற முடியாது. படையினரால் கைதுசெய்யப்பட்ட மூன்று விடுதலைப் புலிகளுக்குப் பதிலாக மூன்று பொலிஸாரையும் விடுவதென்ற கைதிப்பரிமாற்றத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

எனினும் புலிகளால் பிடிக்கப்பட்ட மூன்று பொலிஸாரையும் விடுதலை செய்வதற்கு சர்வதேச சமூகத்தை உட்படுத்துவதற்கான சகல சாத்தியங்கள் குறித்தும் ஆராயப்படும்.

அத்துடன் இவர்களின் விடுதலை தொடர்பாக தொடர்ச்சியான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. ஆனால் கைதிகள் பரிமாற்றமென்பது சாத்தியமில்லையென பிரதமர் உறவினர்களிடம் தெரிவித்தார். (தே)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி

நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் இந்தியாவில் மூன்று வாரகால நிர்வாகப் பயிற்சியை வழங்குவதற்குப் பொலிஸ் திணைக்களம் தீர்மானித் துள்ளது.

இந்தப் பயிற்சிக்கெனத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது குழு கடந்த முதலாம் திகதி இரவு இந்தியாவுக்குச் சென்றுள்ளதாகவும், இந்தக் குழுவில் 35 பொலிஸ் அதிகாரிகள் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

நிரு
கோண்டாவில்
A/L 2008
ஜனவரி 5
மாலை 3 மணி
Acc:- திரு.பாலவாசன்
Eco:- திரு.மோகன்
B.St:- திரு.யசோ
(2156)

D C M A.L 2008
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பொருளியல் வரதராஜன்
அளவையியல் சுதன்
புவியியல் குமரன்
வணிகக்கல்வி உமாகாந்த்
கணக்கீடு பாலவாசன்
ஆங்கிலம் நிஷாந்தன்
இந்து நாகரீகம் ஸ்ரீஸ்
தமிழ் தமிழீந்திரன்
(C/4982)
ஆரம்பம் :- 07.01.2006 சனி 8.00 (ப.நே)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.